பக்கங்கள்: 20 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 05 ஞாயிற்றுக்கிழமை 20.12.2020 கதிர் 45

**இனி இது ரகசியம் அல்ல!**

பலரும் ஜெனிவா பற்றியே இப்போது பேசுகின்றார்கள். ஜெனிவாவில் என்ன நடக்கும்? எத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்படும்? தமிழருக்கு நீதி கிட்ட வாய்ப்பு வருமா?

– இவை எல்லாம் நியாயமான கேள்விகள்.

பக்கம்02 »

# புதிய அரசமைப்புக்கான கூட்டமைப்பின் முன்மொழிவுகள் இம்மாத இறுதிக்குள்!

## சம்பந்தன், மாவை, செல்வம், சித்தர், சுமந்திரன் நேரில் சென்று சமர்ப்பிப்பர்

அரசிடம் சமர்ப்பிப்பதற்கென ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரனின் தலைமையில் தயாரிக்கப்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதிய அரசமைப்புக்கான முன்மொழிவுகளை இம்மாத இறுதிக்குள் உரிய குழுவிடம் சமர்ப்பிப்பது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியின் தலைவர்கள் மற்றும் எம்.பிக்களின் கூட்டம் கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதன்போது இந்தத் தீர் மானம் எடுக்கப்பட்டது எனக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

புதிய அரசமைப்புக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும்படி பக்கம் 02 »

## ஜெனிவா அணுகுமுறை தொடர்பான வரைவு;

# விக்னேஸ்வரனும்,கஜேந்திரகுமாரும் பொய்யான,விஷமத்தனமான பிரசாரம்

## சுமந்திரன் காட்டம்





கொழும்பு, டிசெம்பர் 20

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வரும் மார்ச் மாத அமர்வை ஒட்டி சர்வதேச சமூகத்தை ஐக்கியப்பட்டு அணுகுவதற்காகத் தாம் சமர்ப்பித்த வரைவு ஒன்று தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் எம்.பியும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியும் பொய்யான, விஷமத்தனமான பிரச்சாரம் செய்கின்றனர் என தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. குற்றம் சுமத்தியிருக்கின்றார். பக்கம் 02 »

## கொரோனாச் சாவு 171 ஆக அதிகரிப்பு

மேலும் அறுவர் உயிரிழப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் 6 பேர் உயிரிழந்துள் ளனர்.

மூன்று ஆண்களும், மூன்று பெண்களுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இவர் களில்ஐவர் 65 வயதைக் கடந்தவர்கள்.

இதன்படி இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 171 ஆக அதிகரித்துள்ளது. பக்கம் 02 »

## மருதனார்மடம் கொரோனா கொத்தணி 88 ஆக உயர்வு!

நேற்று மட்டும் 11 பேருக்குத் தொற்று உறுதி



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்.மருதனார்மடம் கொத்தணியில் நேற்றும் 11 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மருதனார்மடம் பொதுச்சந்தை வியாபாரிகளுடன் நேரடித் பக்கம் 02 »

## ஜனாஸாக்களை அடக்கம் செய்கின்ற உரிமையை முஸ்லிம்களுக்கு மறுப்பது அடிப்படை உரிமை மீறல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டன அறிக்கை

முஸ்லிம் மக்கள் தங்கள் மதக்கொள்கைகளுக்கு அமைய இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கான உரிமையை மறுப்பது அவர்களின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான உரிமை மீறல்கள் தொடரக் கூடாது பக்கம் 02 »

## வவுனிக்குளத்தினுள் பாய்ந்தது வான்; தந்தை, மகள் மாயம்; மருமகன் சாவு

நேற்று மாலை சோகம்



(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு, மல்லாவியிலுள்ள வவுனிக்குளத்தினுள் கப் ரக வாகனமொன்று வீழ்ந்து பக்கம் 02 »

## கொரோனாவின் பிடிக்குள் நாங்கள்; விடுதலையைத் துரிதப்படுத்துங்கள்

தமிழ் அரசியல் கைதிகள் அவசர வேண்டுகோள்

தமது விடுதலையை துரிதப்படுத்துவதுடன், தமக்கான உடனடி உடல்நலமேம்பாட்டுக்கும் உதவி புரியுமாறு கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 48 தமிழ் அரசியல் கைதிகள் அவசர வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று உள்ளதாக சுகாதார அதிகாரிகளால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்கள் இந்த அவசர கோரிக்கையை ஊடகங்கள் வாயிலாக அரசியல் மற்றும் சமூகத் தலைவர்களிடம் முன்வைத்துள்ளனர்.

இதுதொடர்பில் கொழும்பு புதிய மகசின் பக்கம் 02 »




## மேலும் 495 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில் நேற்றும் 495 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 32 ஆயிரத்த 875 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் பக்கம் 02 »




தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆனால் இவ்விடயம் குறித்து விமர்சிக்கும் பலரும் யதார்த்தப் புறநிலைகளைக் கவனத்தில் எடுப்பதில்லை.

கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளில் இலங்கை தொடர்பாக மூன்று தீர்மானங்கள் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டன. அந்தச் சமயத்தில் – அச்சூழலில் – இருந்த களப்புற நிலைமை வேறு. இப்போது – வரும் பெப்ரவரி, மார்ச்சில் நிலவப்போகும் – சர்வதேசக் களச் சூழல் முற்றிலும் வேறு.

கடைசியாக நிறைவேற்றப்பட்ட மூன்று தீர்மானங்களும் கொழும்பின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டவை. இலங்கையே தன் நாடு தொடர்பான பிரேரணையைத் தானே அனுசரணை வகித்து முன்கொண்டு வருவதால் மற்றைய நாடுகள் எல்லாம் அந்தப் பிரேரணையை ஏகமனதாக ஆதரித்தன.

எனவே அத்தீர்மானத்துக்கான பிரேரணை – வடிவை – வரைவை – தயாரிப்பதற்கு சம்பந்தப்பட்ட நாடுகள் இலங்கையுடன் மட்டும் பேரம் பேச வேண்டியிருந்தது. விவாதிக்க வேண்டியிருந்தது. இலங்கையும் சேர்ந்து இணங்கும் வடிவத்தில் அதனைத் தயாரிக்க வேண்டியிருந்தது.

இப்போது நிலைமை வேறு. இலங்கை தொடர்பாக – இலங்கைக்கு நெருக்குதல் கொடுக்கும் விதத்தில் – ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு வரும் எந்தப் பிரேரணையையும் இலங்கை எதிரக்கும், இலங்கையுடன் சேர்ந்து நிற்கக் கூடிய நெருங்கிய நட்புநாடுகளும் எதிர்க்கும்.

ஆகவே இலங்கை தொடர்பாகப் பிரேரிக்கப்படும் எந்தப் பிரேரணையும் வாக்கெடுப்புக்குப் போகக் கூடிய நிலைமை உண்டு. எனவே ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 48 உறுப்பு நாடுகளில் 24 உறுப்பு நாடுகளின் ஆதரவை ஈட்டக் கூடிய விதத்தில்தான் பிரேரணை வடிவம் இருக்க வேண்டும். அத்தகைய பொது இணக்கப்பாட்டை – அங்கத்துவ நாடுகள் பலவற்றையும் – அதற்கு இணங்க வைக்கும் – சம்மதித்து ஆதரவளிக்கச் செய்யும் – வடிவத்தில் அந்தப் பிரேரணை வரைவு இருக்க வேண்டும்.

ஆகவே எத்தகைய பிரேரணை வர வேண்டும் என்பது தொடர்பில் தமிழர்களின் எதிர்பார்ப்பு எப்படியாக இருந்தாலும், கவுன்ஸிலில் களநிலைமையைப் பொறுத்துத்தான் அது அமையும். இந்த விடயத்தை முன்னின்று கையாளும் நாடுகள் அந்தக் களநிலைமைக்கு ஏற்பதான் பிரேரணை வரைவின் தீவிரத்தை ஏற்றி, இறக்கி, மாற்ற முடியும்.

இம்முறை இலங்கை விடயத்தை பெரும்பாலும் பிரிட்டன் தான் முன்னின்று கையாளும் எனத் தெரிகின்றது.

இலங்கை தொடர்பில் எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பது, புதிய தீர்மானங்கள் ஏதும் கொண்டு வருவதாயின் அதன் அடிப்படை யாது என்பவை தொடர்பில் சம்பந்தப்பட்ட முக்கிய நாடுகள் தமக்குள் உரையாடலைத் தொடங்கி விட்டன எனவும் அறியவந்தது.

பெரும்பாலும் ஜெனிவாவில் உள்ள பிரிட்டன் தூதரகத்தின் பிரதி தூதுவரே மையமாக நின்று ஏனைய ஆதரவு நாடுகளை ஒருங்கிணைத்து இலங்கை தொடர்பான பொது நிலைப்பாட்டை கவுன்ஸிலில் ஏற்படுத்தும் முயற்சியை இம்முறை கையாளுவர் என்று தெரிகின்றது.

எனவே ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இம்முறை கொழும்புக்கு நெருக்குதல் தரும் எந்தத் தீர்மானமும் அங்குள்ள பிரிட்டன் தூதரகத்தை மையமாக வைத்தே கட்டவிழப் போகின்றது.

அதன் ஒரு கட்டமாக கொழும்புக்கான பிரிட்டிஷ் தூதுவர் சாரா ஹூல்டன் அம்மையார் வரும் புதன்கிழமை கொழும்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியைச் சந்திக்கின்றார்.

கடந்த வாரம் கொழும்பில் அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி ரெப்லிட்ஸ் அம்மையாரையும் அவர் சந்தித்துப் பேசியிருந்தார். அச்சமயமும் இம்முறை ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராகப் புதிய தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட வேண்டும் என்பதை அமெரிக்கத் தூதர், சுமந்திரனிடம் சுட்டிக்காட்டினார் என்று கூறப்பட்டது.

எனினும் இந்த விடயத்தில் அமெரிக்கா இம்முறை முனைப்பாக செயல்பட முடியாது. ஏனெனில் ட்ரம்ப் நிர்வாகம் மேற்படி கவுன்ஸிலிலிருந்து அமெரிக்காவை விலக்கிக் கொண்டு விட்டது. எனினும் புதிய அதிபர் ஜோ பைடன் பதவியேற்றதும் அமெரிக்காவை மீண்டும் கவுன்ஸிலில் அங்கத்தவராக்க முயற்சி எடுக்கப்படும் எனத் தெரிகின்றது. எனினும் அதற்குக் காலம் பிடிக்கும்.

எனவே இம்முறை மார்ச் மாதம் இலங்கை விடயம் கவுன்ஸிலுக்கு வரும் போது அமெரிக்கா பின்புலத்தில் நின்று பிரிட்டன் ஊடாக விடயங்களைக் கையாளும் எனத் தெரிகின்றது.

இவ்வாறு பெப்ரவரி – மார்ச்சில் ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரேரணை நகல் தயாரிப்புப் பணி பல நாடுகளினாலும் முன்னெடுக்கப்படும் போது, அதில் தமிழர்களின் பங்களிப்பும் கட்டாயமானதாகும். அதை ஒற்றுமைப்பட்டு அணுகுவதற்கான வாய்ப்புகள் குறித்தே சுமந்திரன் இப்போது பிரஸ்தாபிக்கின்றார்.

ஒன்றிணைந்து அணுகினால் நல்லது. ஒன்றிணைந்து செயற்படுவரா? அல்லது அரசியல் குதர்க்கம் பேசிக் குழப்புவரா? காலம் பதில் சொல்லும்.

– மின்னல் –

## மருதனார்மடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தொடர்புடையவர்களுக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி மருதனார்மடம் கொரோனா கொத்தணியால் பாதித்தோர் எண்ணிக்கை 88 ஆக உயர்ந்துள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 5 பேர், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 2 பேர் மற்றும் சண்டிலிப்பாய், இளவாலை, மல்லாகம், அளவெட்டி ஆகிய பகுதிகளில் தலா ஒருவர் அடங்குகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துபீட ஆய்வுகூடத்தில் நேற்று 110 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 6 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அத்துடன் முல்லேரியா ஆய்வுகூடத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தியோரில் 2 பேருக்கு நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனிடையே யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 435 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டன. அதில் 3 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது எனவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் கூறினார்.

(முன்னர் வந்த செய்தி 20 ஆம் பக்கத்தில்)

## புதிய அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அரசு கோரியிருந்தது. இதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளது. அதேவேளை, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க அதன் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தயாராகி வருகின்றார்.

இந்தநிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்மொழிவுகளை இம்மாதம் இறுதிக்குள் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா (இலங்கைத் தமிழரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கூட்டாகச் சென்று சமர்ப்பிப்பது என நேற்றைய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எனினும், முன்மொழிவு ஆவணத்தைப் பகிரங்கப்படுத்துவது இல்லை எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் அதை ஆளாளுக்கு அரசியல் செய்வார்கள் என்ற காரணத்தைக் கொண்டே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்புக்கான முன்மொழிவு ஆவணத்தில் இனப்பிரச்சினையின் தோற்றம், அரசமைப்புக்களில் ஏற்பட்ட குறைபாடுகள், அரசமைப்பின் 13ஆவது திருத்தம், அது குறித்த மஹிந்த அரசின் வாக்குறுதிகள், வெளிநாட்டுத் தலைவகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள், தமிழர்களின் அபிலாகைள் போன்றவற்றை ஒவ்வொரு தலைப்புக்களில் வழங்கக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

## விக்னேஸ்வரனும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் அவர்களுக்குக் கொடுத்த ஆவணத்தில் இரண்டே இரண்டு விடயங்கள் தான் இருக்கின்றன.

ஒன்று – இதுவரை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றிய தீர்மானங்களினால் எங்களுக்குப் பெரிய நன்மையாக ஏதும் வந்து விடவில்லை. அதனால் இனிமேல் இதையே முன்கொண்டு நடத்துவதில் அர்த்தமில்லை. ஆகையினால் இதிலும் காட்டமான, தீவிரமான நடவடிக்கை அவசியம். அதற்கு உதாரணமாக – முன்மாதிரியாக – சிரியாவிலும், மியன்மாரிலும் ஏற்படுத்தப்பட்ட பொறிமுறைகளைக் காட்டி, ஒரு வித்தியாசமான நிலைப்பாட்டுக்கு நாங்கள் போக வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது – இந்த விவகாரம் ஒரு சர்வதேச அரங்கில் தொடர்ச்சியாக இருக்க வேண்டும். ஆகவே மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஒரு புதுத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

இது இரண்டும்தான் அதில் உண்டு, அதில் காலநீடிப்பு என்றோ, கால அவகாசம் என்றோ, அதே தீர்மானத்தை மீண்டும் நிறைவேற்றுவது என்றோ எதுவுமேயில்லை.

ஆனால், இவர்கள் இருவரும் நான் அப்படி ஒரு பிரேரணை வரைவைத்தான் முன்வைக்கின்றேன் என்று வேண்டுமென்றே விமத்தனமான, பொய்யான பிரசாரம் ஒன்றை முன்வைக்கின்றனர். அது தவறு. – என்றார் எம்.ஏ.சுமந்திரன். (உ)

## வவுனிக்குளத்தினுள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
விபத்துக்குள்ளானதில் தந்தையும், மகளும் காணாமல்போயுள்ளனர். மருமகனான சிறுவன் உயிரிழந்துள்ளான்.

நேற்று மாலை 4 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

37 வயதான வாகன சாரதியான தந்தையும், 2 வயதுக் குழந்தையான மகளும் காணாமல்போயுள்ளனர்.

நீரில் மூழ்கிய 12 வயது சிறுவனான மருமகன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவன் அங்கு உயிரிழந்துள்ளான்.

கப் வாகனத்திலிருந்த மற்றுமொரு சிறுவனான மகன் பாதுகாப்பாக மீட்கப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

காணாமல்போனவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மல்லாவி – செல்வபுரம் பகுதியைச் சேர்ந்தவர்களே இந்த விபத்தில் சிக்கியுள்ளனர்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்ததால் கப் வாகனம் வாவியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது எனத் தெரியவந்துள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்

## கொரோனாச் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இவர்களில் 158 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் சாவடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாஸாக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எனவும் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு நேற்றுக் கொழும்பில் கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்து அறிக்கை ஊடாக அறிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எங்களது சகோதார முஸ்லிம் சமூகத்தில் இறந்தவாகளின் உடல்களை அவர்களின் நம்பிக்கையின் பிரகாரம் தாமதமின்றி அடக்கம் செய்வது தொடர்பில் விரைவில் ஒரு முடிவுக்கு வருவது கட்டாயமாகும்.

கொரோனாவால் இறந்தவாகளின் உடல்களை முறைப்படி அடக்கம் செய்வதால் கொரோனா பரவாது என்பது சுகாதார நிபுணர்களின் கருத்தாக உள்ளது. உலகெங்கிலும் பல நாடுகளில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் உடல்கள் புதைக்கப்படுகின்றன.

இந்தநிலையில் முஸ்லிம் தலைவர்களுடன் இது குறித்துக் கலந்துரையாடுவதும், மேலும் தாமதமின்றி ஒரு நீதியானதும் நியாயமானதுமான முடிவுக்கு வருவதும் அரசின் கடமையாகும் என்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம் – என்றுள்ளது.

## கொரோனாவின் பிடிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 48 தமிழ் அரசியல் கைதிகளும் அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் ஜி.எச். விடுதிகளில் 48 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளோம். கொழும்பு நகரப் பகுதிகளிலும் சிறைச்சாலைகளிலும் அதிகரித்துக் கொண்டிருக்கும் கொரோனாத் தொற்று காரணமாக நாம் தடுத்துவைக்கப்பட்டுள்ள விடுதிகளிலேயே எமக்கான சுயதனிமைப்படுத்தலைக் கடைப்பிடித்து வந்தோம். எனினும், கடந்த இரண்டு வாரங்களாக அனைத்து அரசியல் கைதிகளுக்கும் கடும் காய்ச்சலுடன் உடல் உபாதைகள் ஏற்பட்டுள்ளன.

நேற்று எமது விடுதிகளைச் சேர்ந்த சிலருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

ஆகவே, மகசின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது எனச் சிறைச்சாலையில் பொதுச் சுகாதாரப் பிரிவு கவனப்படுத்தியுள்ளது.

போதிய தொற்று நீக்கல் செயற்திட்டம் மற்றும் ஊட்டச்சத்தான உணவு பராமரிப்பு இன்மைகளுக்கு மத்தியில் நாம் தொடர்ந்து விடுதிகளிலேயே சுயதனிமைப்படுத்தல் முறையை மேற்கொண்டு வருகின்றோம்.

நீண்டகாலம் சிறைத்தடுப்பிலுள்ள எம்மவர்களுள் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் வயதானவர்களும் இருப்பதால் அரசியல் கைதிகள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது என்பதனைத் தெரியப்படுத்துகின்றோம்.

இவ்வேளையில் அரசியல் கைதிகளான எமது விடுதலையைத் துரிதப்படுத்துவதுடன், எமது உடனடி உடல் நல மேம்பாட்டுக்கும் உதவி புரியுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரி நிற்கின்றோம் – என்றுள்ளது.

## மேலும் 495 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 36 ஆயிரத்து 544 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 27 ஆயிரத்து 552 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 821 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# பலாலி விமான நிலையத்தை மூடுகின்ற நடவடிக்கையை அரசு கைவிடவேண்டும்!

## சுரேஷ் பிறேமச்சந்திரன் வலியுறுத்து

பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாகவோ அல்லது பிராந்திய விமான நிலையமாகவோ தொடர்ந்து செயற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பலாலி விமான நிலையத்தை மூடுவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை அரசாங்கம் கைவிடவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் கடந்த (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

பலாலி விமான நிலையம் என்பது பிரித்தானியா இலங்கையை ஆண்ட காலத்தில் பிரித்தானிய அரசாங்கத்தால் தமது விமானப்படைக்காக கட்டப்பட்ட ஒரு விமான நிலையம். அதற்கு பின்பாக விமான நிலையம் என்பது கொழும்பு, பலாலி மற்றும் பலாலியில் இருந்து திருச்சிக்கு சேவையாற்றிய விமான நிலையமாக இருந்து வந்தது.

யுத்த காலத்தில் மீண்டும் இலங்கையின் விமான நிலையமாக மாறியிருந்தது. அதேவேளை ரத்மலானை கொழும்புக்குமான போக்குவரத்து விமான நிலையமாக இடம்பெற்று வந்தது.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2019 ஆம் ஆண்டு தமிழ்க் கட்சிகளால் இலங்கை இந்திய அரசாங்கங்களிடம் விடுத்த கோரிக்கையின் பேரில் பலாலி விமான



நிலையம், பிராந்திய விமான நிலையமாக மாற்றப்பட்டது.

இந்திய அரசாங்கம் இதற்காக 30 கோடி ரூபாவை வழங்கியிருந்தது. சிறிய விமானங்கள் வந்து இறங்கும் விமான நிலையமாகவும் சென்னைக்கும் யாழ்ப்பாணம் பலாலிக்கும் இடையில் நடத்தும் விமான நிலையமாகத்தான் இருந்து வந்தது.

அந்த விமான ஓடு பாதையை நீளமாக்குவதன் மூலம் தான் பெரிய விமானங்கள் குறிப்பாக 100 – 150 இற்கும் மேற்பட்ட பயணிகள் வந்து இறங்கக்கூடிய விமான நிலையமாக மாற்றவேண்டும் என்ற அடிப்படையில் இந்திய அரசாங்கம் மேலதிகமாக இன்னும் 30 கோடி ரூபாவெள அபிவிருத்தி செய்வதற்காக வழங்கியிருந்தது.

பணம் வழங்கி ஒரு வருடம் கடந்த நிலையிலும் கொரோனா காலத்திலும் இதனை அபிவிருத்தி செய்திருக்க முடியும். ஆனால் அந்த நிதி எந்த அபிவிருத்தியும் செய்யப்படாது, அபிவிருத்திகள் அனைத்தும் தடுத்து நிறுத்தப்பட்டு, நிதி பயன்படுத்தப்படாது அரசாங்கத்திடமே உள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. வடக்கு மாகாணத்துக்குக் கிடைத்த ஒரே ஓர் அபிவிருத்தி நிதி இது என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இதனை பிராந்திய நிலையமாக மாற்றுகின்றபோது நூற்றுக்கணக்கான வேலைவாய்ப்புக்கள், அபிவிருத்திகள், சுற்றுலாப் பயணிகள் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் அதன் ஊடாக சுற்றுலா விடுதிகள், ஹோட்டல்கள் அபிவிருத்தி அடைகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கின்றது.

இன்று அரசாங்கம் எடுத்திருக்கும் முடிவுகளின் படி அரசாங்கம் மீண்டும் இந்த விமான நிலையத்தை மூட இருப்பதாக நாங்கள் அறிகின்றோம். சர்வதேச போக்குவரத்துக்கு அல்லது பிராந்திய போக்குவரத்துக்கு விமான நிலையத்தை மூடவுள்ளதாக அறிகின்றோம்.

இது உண்மையாகவே வடக்கு கிழக்குக்கு அபிவிருத்தி மாத்திரம் இருந்தால்போதும் தமிழ் மக்களுக்கு வேறு எந்தத் தேவைகளும் இல்லை எனக்கூறும் அரசாங்கம் யுத்ததுக்குப் பிற்பாடு கிடைத்த ஒரே ஓர் அபிவிருத்தியை இல்லாது செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. ஆகவே இந்த நடவடிக்கைக்கு எதிராக வடக்கு கிழக்கில் இருந்து அமைச்சர்களாக இருப்பவர்கள் அர சாங்கத்துடன் இருப்பவர்கள் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்காகக் குரல் கொடுக்கவேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மட்டு. அமிர்தகழியில் கணபதி மகா ஹோமம்!



கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் லட்சாட்சனை பூர்த்தி மற்றும் கணபதி மகா ஹோமம் பக்திபூர்வமாக நடைபெற்றது.

ஆலயத்தில் அனுஸ்டிக்கப்பட்டுவரும் விநாயகர் காப்பு விரதத்தையொட்டி கடந்த 18 தினங்களாக ஆலயத்தில் லட்சார்ச்சனை பஞ்சமுக விநாயகருக்கு நடத்தப்பட்டுவந்தது.

ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ ஆதிசௌந்தரராஜ குருக்கள் தலைமையில் இந்த உற்சவம் கடந்த (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக குறைந்தளவான பக்தர்களின் பங்குப்பற்றலுடன் ந்த இலட்சாட்சனை பூர்த்தி மற்றும் கணபதி மகா ஹோமம் நடைபெற்றது.

பஞ்சமுக விநாயகருக்கு லட்சார்ச்சனை நடைபெற்றதை தொடர்ந்து கணபதி மகா ஹோமம் சிறப்பாக நடைபெற்றது. 67 வகையான மூலிகைகள் கொண்டு இந்த மகா கணபதி ஹோமம் நடத்தப்பட்டது.

இதன்போது இந்த நாட்டில் தாக்கம் செலுத்திவரும் கொரோனா என்னும் கொடிய அரக்கன் அழிந்து, நாடு சுபீட்சம் அடையவும் நாட்டில் அமைதி நிலவவும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 20.12.2020 | ஞாயிற்றுக்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 10 கத்தோலிக்கம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 கத்தோலிக்கம் (2ஆம், 4ஆம்) |
| 06.00 - 06.55 | தரம் - 10 சைவநெறி (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 சைவநெறி (2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 10 வரலாறு (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 வரலாறு (2ஆம், 4ஆம்) |
| 11.00 - 11.55 | தரம் - 10 இஸ்லாம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 இஸ்லாம் (2ஆம், 4ஆம்) |
| 12.00 - 12.55 | தரம் - 03 தமிழ் |
| 12.30 - 12.25 | தரம் - 03 கணிதம் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 13.00 - 13.25 | தரம் - 04 கணிதம் |
| 13.30 - 13.55 | தரம் - 04 தமிழ் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 14.00 - 14.25 | தரம் - 05 கணிதம் (1ஆம், 3ஆம்) மற்றும் ஆங்கிலம் (2ஆம், 4 ஆம் |
| 14.30 - 14.55 | தரம் - 05 தமிழ் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 18.00 - 18.55 | தரம் - 10 ஆங்கிலம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 ஆங்கிலம் (2ஆம், 4ஆம்) |
| 23.30 - 24.30 | தரம் - 10 கிறிஸ்தவம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 கிறிஸ்தவம் (2ஆம், 4ஆம்) |

## இறைச்சிக்கடை ஊழியருக்கு திருகோணமலையில் தொற்று

திருகோணமலை நகர சபை பிரிவிற்குட்பட்ட மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள நகர சபைக்கு சொந்தமான இறைச்சிக்கடையில் பணிபரியும் ஊழியர் ஒருவருக்கு கொரோனா உறுதியானதை அடுத்து இறைச்சிக் கடைகள் மூடப்பட்டன.

அத்துடன் அதனை அண்டி உள்ள ஆட்டிறைச்சிக்கடை, கோழியிறைச்சிக்கடை ஆகியன மூடப்பட்டமையுடன் தொற்று உறுதியான ஊழியரின் குடும்ப உறுப்பினர்களான இரண்டு வயது குழந்தை உட்பட மூன்று நபர்களுக்கு திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

தொற்று உறுதியான திருகோணமலை ஜமாலியா பிரதேசவாசியான மாட்டிறைச்சிக்கடை ஊழியர் தனிமைபடுத்தல் மத்தியநிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## யார் கோடரிக் காம்பு?

தமிழர் தேசத்தின் – தமிழர் தேசியத்தின் – எதிரி பலமாக இருக்கின்றான். மிக, மிகப் பலமாக இருக்கின்றான்.

தமிழர் தேசமோ பிளவுண்டு, சிதறுண்டு, தனக்குள் முட்டிமோதி, எதிரெதிர்த் திசையில் தீவிரம் கொண்டு நிற்கின்றது.

அத்தோடு அகப் பலமாக இருந்த தனது ஆயுதப் போராட்ட சக்தியையும் முழுமையாக இழந்து, அஹிம்சைப் போராட்டத்தைக் கொதி நிலையில் முன்னெடுக்கும் தெம்பும், தைரியமும், திடசங்கற்பமும், பற்றுறுதியும் கொண்ட தலைமைகளும் இல்லாமல் தள்ளாடுகின்றது தமிழினம்.

இப்படி வலுவிழந்து கிடக்கும் தமிழினத்தின் இந்தப் பலவீன நிலைமையை வசமாகப் பயன்படுத்தி, இலங்கைத் தீவில் அதன் தனித்துவத்தை – தாயகத்தை – அதன் மீதான உரிமையை – சிதறடித்துக் கபளீகரம் செய்வதற்குப் பேரினவாதம் இங்கு தீவிரமாகவும், துடிப்பாகவும், வலுவாகவும், மிக உறுதியாகவும் கிளர்ந்து நிற்கின்றது.

இத்தகைய பேரவல நிலையில் தமிழினத்தைப் பாதுகாப்பதற்கு ஏதேனும் புறப்பலத்தைத் தேட வேண்டிய கட்டாயம்.

இதுதான், நமது இனத்தின் இன்றைய பரிதாப நிலைமை. இக்கட்டுச் சூழல்.

தமிழர் பக்கம் இருக்கும் அவர்களின் உரிமைப் போராட்டத்துக்கான நியாயமும், அந்த நியாயத்தின் அடிப்படையில் நாம் திரட்டக்கூடிய சர்வதேச ஆதரவும்தான் இன்றைய நிலையில் எமக்குக் கிட்டக்கூடிய ஒரே புறப்பலம்.

அதேநேரம் தமிழர் தேசத்துக்கு இன்று அகப்பலமாக எஞ்சியிருப்பது – அல்லது கிட்டக் கூடியது – தனது பிறப்புரிமைகளுக்காக – தனது இருப்புக்காக – அஹிம்சை வழியில் அது போராடுவது ஒன்றுதான். தமிழர் தேசத்தின் தலைவர்களாகத் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொள்பவர்கள் அந்த வழியில் தமிழரின் போராட்ட வலிமையை முற்கொண்டு செல்ல வேண்டும் – தமிழர்களின் தந்தை செல்வநாயகம் போல.

ஆனால் இங்கு – இன்று – தங்களைத் தமிழர்களின் தலைவர்களாகக் காட்டிக் கொள்ளும் எவரும் அஹிம்சை போராட்ட மார்க்கத்தில் ஓரடி எடுத்து வைக்கக் கூடத் தயாரில்லாத கோழைகள் என்பது துலாம்பரமானது.

வெறுமனே காகித அறிக்கைகளும், வெற்றுக் கோஷங்களும், சில மணி நேர அடையாள உண்ணாவிரதங்களும், நாடாளுமன்ற முழக்கங்களும் அஹிம்சைப் போராட்ட வலிமையாகி விடா.

காந்தியும், தந்தை செல்வாவும் முன்னெடுத்த அஹிம்சை மார்க்கம் அதிர்வு நிறைந்தது. தன்னை ஒறுத்து, எதிரியை நிலைகுலைய வைக்கும் அப்போராட்டத்தின் வலிமை அளப்பரியது. தலைமையிலிருந்து பீறிட்டெழ வேண்டிய அந்தக் கோட்பாடு இங்கு தலைமைகளாலேயே முடக்கப்பட்டுக் கிடக்கின்றது.

அஹிம்சை மார்க்கத்தில் மக்களைத் திரட்டி, அதிர்வு மிக்க போராட்டங்களை முன்னெடுக்க முடியாத – எஞ்சியிருக்கக் கூடிய எமது அகப்பலத்தை வலிமைப்படுத்தி வெளிப்படுத்தும் சக்தியற்ற – நமது தலைவர்கள் புறப்பலமாக எமக்குக் கிட்டக்கூடிய – எமது இனம் திரட்டக் கூடிய – சர்வதேச ஆதரவை உருப்படியாகப் பெறுவதற்கும் முட்டுக்கட்டையாக – குழப்பவாதிகளாக – இருக்கின்றார்கள்.

மயிலே, மயிலே இறகு போடு என்றால் மயில் இறகு போட்டு விடப் போவதில்லை. அது போன்றதுதான் சர்வதேச ஆதரவும். ஆனால் அதேசமயம் சர்வதேச ஆதரவை மல்லுக் கட்டிப் பிடுங்கி – பறித்து – எடுக்கவும் முடியாது. அதனோடு இணைந்து, இணங்கி, இசைந்து, உறவாடி, ஊடாடித்தான் அதனைப் பெறமுடியும். பெறவேண்டும்.

அத்தகைய ஊடாட்டத்துக்கு தமிழினம் ஒரு குரலில் பேசவேண்டும். ஐக்கியப்பட்டு சர்வதேசத்தை அணுகுவது அதற்கு முக்கியம். ஆனால் இந்தத் தாற்பரியத்தை – தங்களின் கடைசிக் கொழு கொம்பாக இருக்கும் சர்வதேசத்தை அணுகும் வழிமுறையை – புரிந்து கொள்ளாமல், அல்லது புரிந்தும் தமது குறுகிய அரசியல் நோக்கங்கள், சுயநலங்கள், இலக்குகள், பண்பியல்புகள் காரணமாக அந்த முக்கியத்துவத்தைப் புறமொதுக்கி, சின்னத்தனமாக நடக்கின்றன நம் தமிழர் தலைமைகள்.

நமக்குக் கிடைத்திருக்கும் ஒரே போராட்ட மார்க்கம் அஹிம்சை நெறிதான். அந்த வழியில் தாங்களே முன்னின்று உரிமைக் கோரிக்கையை அழுத்தமாக, உலகமே அதிரும் விதத்தில், வலிமையாக முன்வைக்கவும் நம் தலைவர்கள் தயாரில்லை.

மறுபுறம் நமக்குக் கிடைக்கக் கூடிய புறப்பலமான சர்வதேச ஆதரவை நமக்குக் சாதகமாகத் திரட்டி, அதனை நமக்குரிய வலியமையாக மாற்றும் முயற்சியிலும் அவர்கள் ஐக்கியப்படமாட்டார்கள். பிரிந்து நின்று, தத்துவம் பேசி, கொள்கைக் கோட்பாடு பிளந்து, நமது ஐக்கிய வலிமையைச் சிதறடித்து, விதண்டாவாதம் பண்ணு போக்கையும் மாற்ற மாட்டார்கள்.

தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டு இந்த நாசப் போக்கை முன்னெடுக்கும் அரசியல் தலைமைகள், சிங்களத்தின் தோளில் கைபோட்டு தமிழினத்துக்கு ஏதேனும் பெற்றுக் கொடுக்க முடியாதா என்று துடிக்கும் – வெளிப்படையாகக் பேசி, நடக்கும் – தமிழ் அரசியல் தலைமைகளின் தகுதிக்குக் கூட மதிக்கப்பட முடியாதவர்கள்.

உண்மையான அரசியல் கோடரிக் காம்புகள் இவர்கள்தாம்.

நிலைமையின் தீவிரத்தைப் புரிந்து கொண்டு தம் போக்கை அவர்கள் மாற்றிக் கொள்வது நல்லது.

# மேல்மாகாணப் பாடசாலைகளை திறப்பது குறித்து நாளை தீர்மானம்

## கல்வி அமைச்சர் கூறுகின்றார்



மேல் மாகாணத்தில் பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பிலான தீர்மானம் நாளை 21 ஆம் திகதி அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் –

இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார அதிகாரிகளுடன் விவாதித்தார் எனத் தெரிவித்தார்.

எனவே விவாதிக்கப்பட்ட அனைத்து விடயங்களும் மதிப்பாய்வு செய்யப்படும் என்றும் இறுதி முடிவு திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறினார்.

இதேவேளை டிசெம்பர் 23 ஆம் திகதி வரை காலி வலய கல்விக்குற்பட்ட பாடசாலைகளை மூட தென் மாகாண கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

அத்தோடு அரச பாடசாலைகளுக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் மூன்றாம் தவணை விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 2021 ஜனவரி 03 ஆம் திகதிவரை பாடசாலை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 2021 ஆம் ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் ஜனவரி 4 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# எட்டு லட்சம் வழக்குகள் நீதிமன்றில் நிலுவையில்!

நாடளாவிய ரீதியிலுள்ள நீதிமன்றங்களில் சுமார் 8 லட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதியமைச்சின் செயலாளர் எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே இதனைத் தெரிவித்துள்ளார்.

இவற்றை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேலும் 15 வருடங்கள் தேவைப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வழக்குகளை விசாரணை செய்வதைத் துரிதப்படுத்துவதற்காக, நீதிமன்றங்கள் மற்றும் நீதிவான்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, சிறைச்சாலைகளுக்குள் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக சுமார் 8 ஆயிரம் கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை ஒரு வருட காலத்துக்கு புனர்வாழ்வளிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மீனவர்களின் போராட்டம் 5 ஆவது நாள் தொடர்ந்தது





இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவித்து முல்லைத்தீவு மீனவர்கள் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் இடம்பெற்றது.

அண்மைய நாள்களாக முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் இழுவை படகுகளின் அத்துமீறிய செயல் காரணமாக தொடர்ச்சியாக தமது வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து –

இந்திய, இலங்கை அரசாங்கம் உரிய வகையில் பேச்சுகளை நடத்தி, எல்லை மீறி தமது பகுதிகளில் வருகின்ற மீன்பிடி படகுகளை கட்டுப்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி தமக்கு தமது வாழ்வாதாரத் தொழிலை நிம்மதியாக செய்வதற்கான சூழலை ஏற்படுத்தித் தருமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்திவருகின்றனர்.

எல்லை தாண்டி வருகின்ற மீனவர்களைக் கட்டுப்படுத்த இலங்கை கடற்படையினர் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும், எல்லைதாண்டி வந்தவர்களை உரிய வகையில் கட்டுப்படுத்தினால் எமது வாழ்வாதாரத் தொழிலை சிறந்த முறையில் செய்து கொண்டு இருக்க முடியும் எனவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், சாள்ஸ் நிர்மலநாதன், வினோ நோகராதலிங்கம் ஆகியோர் சென்று மீனவர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

# 2 ஆயிரத்து 400 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு எதிராகப் பதிவு!

இந்தவருடத்தின் இதுவரையானகாலப்பகுதியில் பொலிஸாருக்கு எதிராக 2 ஆயிரத்து 400 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

அவற்றில் 51 வீதமான குற்றச்சாட்டுகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்காமை மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டமை தொடர்பில் பெருமளவிலான குற்றச்சாட்டுகள் கிடைத்துள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

இதுவரை விசாரணை நடத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தில் தொடர்ந்தும் முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனாவை ஒழிக்க கிராமந்தோறும் குழுக்கள்

## கிழக்கு மாகாணப் பணிப்பாளர் தெரிவிப்பு



கொரோனா வைரஸை ஒழிக்க கிராமங்கள் தோறும் குழுக்கள் அமைக்கப்படுவதுடன், இனி வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு அமைய எதிர்காலத்தில் நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படவுள்ளன என கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் அழகையா லதாகரன் குறிப்பிட்டார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கடந்த (வெள்ளிக்கிழமை) மாலை, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் தலைமையில் நடைபெற்ற விசேட உயர்மட்ட கூட்டத்தின் பின்னரான ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு கூறினார்.

அந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

அம்பாறை மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவல் தொடர்பில் பல்வேறு கோணங்களில் கருத்துக்களை நாம் பரிமாறிக்கொண்டுள்ளோம்.

கல்முனை பிராந்தியத்தில் கொரோனா தொற்று அதிகரித்து செல்கின்றதா இல்லையா என்பதை ஆராய்ந்துள்ளோம். ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் கிராமங்கள் தோறும் குழுக்கள் அமைத்தலை உறுதிப்படுத்துதல், கிராமங்கள் தோறும் மக்களுக்கு விழிப்பூட்டல்களை செய்தலை மேற்கொள்ளுவதுடன் இனிவரும் காலங்களில் கல்முனை பிராந்தியத்தில் இராணுவம், பொலிஸாரின் பங்களிப்புடன் சுகாதார நடைமுறைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டவுள்ளது.

இது தவிர இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு அமைய எதிர்காலத்தில் நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படவுள்ளன.- எனக் குறிப்பிட்டார்.

# மட்டக்களப்பில் கோர விபத்து: மகன் மரணம் தந்தை படுகாயம்

மட்டக்களப்பு – மீராவோடை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளமையுடன் ஒருவர் காயமடைந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

மோட்டர் சைக்கிள் டிராக்டரை முந்திச் செல்வதற்கு முயற்சித்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த வாழைச்சேனை விநாயகர்புரம் பகுதியைச் சேர்ந்த தந்தையும் மகனுமே முன்னால் சென்ற டிராக்டரில் மோதுண்டனர். இதில் ஜெயசீலன் கிரிஜன் (வயது – 18) என்பவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்.

தந்தையான சிவப்பிரகாசன் ஜெயசீலன் என்பவர் காயமடைந்து வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.





# காணி மற்றும் நிதி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சகல மாவட்டங்களிலும் விசேட நியாயாதிக்க சபை

காணி மற்றும் நிதி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு விசேட நியாயாதிக்க சபையை ஸ்தாபிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மற்றும் நியாயாதிக்க சபையின் உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சில பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் 09 ஆம் திகதி தொடக்கம் மீள ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காணி மற்றும் நிதி தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கின்றமையால் விசேட நியாயாதிக்க சபைகளை ஸ்தாபிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, குருநாகல், கண்டி மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இந்த விசேட நியாயாதிக்க சபை ஸ்தாபிக்கப்படவுள்ளது.

# 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பி.சி.ஆர். வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது!

கொரோனா தொற்று நோயாளிகளை அடையாளம் காண இலங்கையில் வெள்ளிக்கிழமை மட்டும் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அன்றையதினம், 16 ஆயிரத்து 542 பி.சி.ஆர் சோதனைகள் நடத்தப்பட்டன என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

மேலும் கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதியில் இருந்து இதுவரை நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த பி.சி.ஆர். பரிசோதனைகள் எண்ணிக்கை 10 லட்சத்து 86 ஆயிரத்து 62 ஆக உயர்ந்துள்ளது.

இவற்றில் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதியை அதிக எண்ணிக்கையிலான அதாவது 17 ஆயிரத்து 425 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

SOORYA
சிறந்த 10 ஆக்கங்களுக்கு SOORYA நத்தார் பரிசுப் பொதிகள்!!
இந்த பண்டிகைக் காலத்தில் சூர்யாவிடமிருந்து 4,000 ரூபா பெறுமதியான பரிசுப்பொதிகளை வெல்லுங்கள்!!
நீங்கள் செய்ய வேண்டியது:- fb.com /Sun Match
1. எமது சூர்யா Sun Match Facebook page ஐ Like செய்து போட்டிக்கான Post ஐ உங்களது timeline இல் Share செய்யுங்கள்.
2. சூர்யா மெழுகுவர்த்திகளைக் கொண்டு நீங்கள் தயாரித்த அலங்காரத்தைப் புகைப்படமெடுத்து அதனை எமது page இல் comment செய்யுங்கள் (சூர்யா மெழுகுவர்த்திப் பெட்டியொன்று அருகில் தெரியும் விதமாக புகைப்படமெடுக்கவும்).
3. அதில் 5 நண்பர்களை Tag செய்யுங்கள்.

போட்டி முடிவுத் திகதி 30.12.2020

தெரிவு செய்யப்படும் 10 வெற்றியாளர்களுக்கு அவர்களது இல்லங்களுக்கே பரிசுப்பொதிகள் அனுப்பி வைக்கப்படும்.
சூர்யா மெழுகுவர்த்திகள் 2 அளவுகளில் கிடைக்கின்றன.
மேலதிக விபரங்களுக்கு 0773598440 என்ற இலக்கத்தை தொடர்புகொள்ளவும்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆழ்கடலில் உயிரை பணயமாக்கி அற்பாயுளில் உதிர்ந்த மலர்கள்

இம்மாதம் ஆஸ்திரேலியாவில் தற்கொலை செய்த ஈழத்துத் தமிழ் இளைஞர்கள் வருண்ராஜ் ஞானேஸ்வரன் மற்றும் கிசோபன் ரவிச்சந்திரன் ஆகியோர் பற்றிய செய்திகள் வெளியாகியமையை அடுத்து அங்கிருக்கும் எழுத்தாளர் முருகபூபதி வரைந்த அஞ்சலிக் குறிப்பு இது.

**முருகபூபதி**

நான் ஆஸ்திரேலியா மெல்பனில் வசிக்கும் புறநகரமான மோர்வெல்லிலிருந்து சுமார் 65 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் மற்றும் ஒரு புறநகரமான சேல் என்ற ஊருக்கு கனத்த மனதுடன் சென்றுகொண்டிருக்கின்றேன்.

அந்தப் பாதையால் அதற்கு முன்னர் பலதடவைகள் ஆஸ்திரேலியாவின் மாநிலத் தலைநகரம் கன்பராவுக்கு சென்றிருந்தபோது இருந்த மனநிலையில் கடந்த செவ்வாயன்று மேற்கொண்ட அந்தப் பயணம் அமைந்திருக்கவில்லை.



கிசோபன் ரவிச்சந்திரன்

இந்த 2020 ஆம் ஆண்டு பிறந்தது முதல் எனக்குத் தெரிந்த சில கலை, இலக்கிய ஆளுமைகள் மறைந்ததையடுத்து அஞ்சலிக் குறிப்புகள் எழுதியிருக்கும் நான், எதிர்பாராதவகையில் எனக்கு என்றைக்குமே அறிமுகமில்லாத ஒரு தமிழ் இளைஞன் குறித்த அஞ்சலிக் குறிப்புகளை எழுத நேர்ந்து விட்டதும் விதிப்பயனா ? அல்லது உலகெங்கும் அகதிகளாக அலைந்துழலும் மனித குலத்தின் சோகக்குரலின் எதிரொலியா..?



இலங்கையில் நீடித்த போரின் முடிவுடன், அங்கிருந்து இந்தியாவுக்கும் பின்னர் அங்கிருந்து ஆஸ்திரேலியாவுக்கும் படகேறி வந்து குவிந்த மக்கள் திரளின் ஒரு பிரதிநிதியான செல்வன் வருண்ராஜ் ஞானேஸ்வரன் இம்மாதம் 05 ஆம் திகதி சனிக்கிழமை மெல்பனில் ஓர் உயரமான கட்டடத்திலிலிருந்து குதித்து தற்கொலைசெய்துகொண்டார்.

அவருடைய இறுதி நிகழ்வுக்குத்தான் அவருடையதும் அவரது தாயார் மற்றும் ஒன்பதாம் வகுப்பு பயிலும் அவரது தங்கையினதும் புகலிடக்கோரிக்கை விண்ணப்பத்தில் கவனம் செலுத்தும் சட்டத்தரணி செல்வத்துரை ரவீந்திரன் மற்றும் அவருடை துணைவியார் ஜெஸி ரவீந்திரன், புதல்வன் அரூரண் ரவீந்திரன் ஆகியோருடன் அவர்களின் காரில் சென்றுகொண்டிருக்கின்றேன்.

தற்கொலை செய்துகொண்ட செல்வன் வருணின் இறுதி நிகழ்வுகள் நடக்கும் சேல் என்ற புறநகர், நான் வதியும் மோர்வல் நகரிலிருந்து 65 கிலோ மீற்றல் தொலைவு. ஆனால், சட்டத்தரணி ரவீந்திரன் குடும்பத்தினருக்கு அதில் மும்மடங்கு தொலைவு. அவர்கள் குடும்ப சமேதராக இந்த இளைஞனின் இறுதி நிகழ்வில் அவனை வழியனுப்ப வருகிறார்கள் என்றால், அவனதும் அவனது தாய் மற்றும் தங்கையுடனும் அவர்களுக்கிருந்த நேசம் புரிந்துகொள்ளத்தக்கது.

இதுவரையில் ஆஸ்திரேலியாவிற்கு படகுகளில் வந்த புகலிடக் கோரிக்கையாளர்களின் தற்கொலை வீதம் கூடியிருக்கிறதே தவிர குறையவில்லை.

இங்க வந்து தற்கொலை செய்வதற்கு அகதியாக மாத்திரம் இருக்கவேண்டுமென்பதில்லை. அகதியாக வராமல் தொழில் நிமித்தமும், குடும்ப உறவுமுறையில் அழைக்கப்பட்டுக் குடியேற வந்தவர்களின் மத்தியிலும் தற்கொலைகள் நடந்திருக்கின்றன.

இந்தப் பதிவை எழுதும்போதும் உலகில் எங்காவது ஒரு மூலையில் யாராவது ஒருவர் ஏதோ ஒரு காரணத்துக்காக தற்கொலைசெய்துகொள்கிறார்.

அவற்றை தடுப்பதற்கான முயற்சிகளும் பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்கொலைகளை தடுப்பது எவ்வாறு என்ற விளக்கம் தரும் நூல்களும் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. ஆனால், தற்கொலைகளையோ, தற்கொலை முயற்சிகளையோ தடுக்க முடியாதிருக்கிறது.


செல்வன் வருண், தமது தாயருடனும் தங்கையுடனும் Safe Haven EnterpriseVisa ( SHEV) என்ற விசா அனுமதியுடன் சேல் என்ற புறநகரில் வசித்தவர். இவரது தந்தையாரும் மற்றும் ஒரு சகோதரியும் தமிழ் நாட்டில் தொடர்ந்தும் அகதியாக வாழ்ந்துகொண்டிருப்பவர்கள். வருண், சேல் நகரத்திற்குவருமுன்னர்,தாய்,தங்கையுடன் Dandenong என்ற மாநகரில் இருந்து பாடசாலையில் கற்றவர் என்றும், மொடலிங் துறையில் ஆர்வம் மிக்கவர் என்றும் அதற்காக தன்னை அழகாக வடிவமைத்து பல கோணங்களில் படம் எடுத்து அதற்கென பிரத்தியேக அல்பமும் தயாரித்தவர் எனவும், எதிர்காலத்தில் ஒரு சிறந்த மொடலாகவேண்டும் என்ற கனவுடனும் வாழ்ந்திருப்பவர் என்பதும் தெரியவருகிறது.

## படகு மனிதர்களின் சோகம் தொடருகிறது!

நேற்று (15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மதியம் சேலில் நடந்த வருணின் இறுதி நிகழ்வில் காண்பிக்கப்பட்ட காணொலிகளில் வருணின் அழகிய பல கோணங்களைப. பார்க்க முடிந்திருந்தாலும், பிரேதப்பெட்டகத்தில் அவரது உயிரற்ற உடலைப்பார்த்தபோது மனம் நிலை குலைந்துவிட்டது.

**நண்பர்கள் பலரைச் சம்பாதித்த வருண், தற்கொலைக்காக அந்த உயர்ந்த கட்டடத்தில் ஏறும்போது ஒரு கணம் அந்த நண்பர்களையும் தனக்கு பாலூட்டி உணவூட்டி சீராட்டி வளர்த்த தாயையும் நினைக்கத் தவறியமை கொடுமைதான்.**

'எத்தனை கனவுகளை சுமந்துகொண்டு பெற்ற தாயுடனும் உடன் பிறந்த அருமைத்தங்கையுடனும் ஆழ்கடல் கடந்து வந்திருப்பாய் மகனே... அந்தக் கனவுகளையெல்லாம் சிதைத்துகொண்டு, உனது உடலை சிதைத்து இன்னுயிரைப் போக்குவதற்காகவா




சேலிலிருந்து இருநூறுக்கும் மேற்பட்ட கிலோமீற்றர் தொலைவிலிருக்கும் அதியுயர்ந்த கட்டிடத்தை நோக்கிச் சென்றாய்..? '

உனக்கு உயிரும் உருவமும் கொடுத்துச் சுமந்து பெற்றெடுத்து வளர்த்து, ஆளாக்குவதற்காகவும் உன்னுயிரை ஆயுத அரக்கர்களிடமிருந்து காப்பதற்காகவும் முன்பின் தெரியாத கடல் சூழ்ந்த கண்டத்திற்கு உன்னையும் அழைத்து வந்து சேர்த்து அரவணைத்து, நீ கேட்டதெல்லாம் பெற்றுக்கொடுக்க இரவு பகல் என்று பாராமல் உழைத்துழைத்து தனது வாழ்நாளை செலவிட்ட அருமைத் தாயின் கதறல் உனக்கு கேட்குமோ தெரியாது. ஆனால், அங்கிருந்து உனக்கு மலரஞ்சலி செலுத்திய ஏனையவர்களுக்குக் கேட்டது. தொடர்ந்தும் கேட்டுக்கொண்டிருக்கிறது.

அந்த அழுகுரலையும் நாம் கடந்து சென்றுவிடலாம். ஆனால், உனது திடீர் மறைவு அந்த பெற்றமனதை என்றைக்கும் ஆற்றுப்படுத்தாது. எந்தப் பக்கம் திரும்பினாலும் உனது முகம்தான் முன்னால் தோன்றும். அவள் காணும் கனவுகளிலும் நீதான் நிறைந்திருப்பாய்.



செல்வன் வருண்ராஜ் ஞானேஸ்வரன்

உன்னைப்போன்று படகுகளில் வந்த ஆயிரக்கணக்கான இளம் தலைமுறையினரில் குழந்தைகளும் இருக்கின்றனர். அவர்கள் தமக்கு கிடைக்கும் சொற்பமான வாய்ப்பு வசதிகளை பயன்படுத்தி கற்கின்றனர். பல்கலைக்கழகத்திற்கும் பிரவேசிக்கின்றனர். பகுதி நேர வேலை செய்து, தொடர்ந்தும் படிக்கின்றனர்.

தமிழ் ஈழம் கோரிப் போராடியதனால், அழிக்கப்பட்டும் அகதிகளாக அலைந்துழலவும் நேர்ந்த பின்னரும், புகலிடம் பெற்ற அந்நிய நாட்டிற்கு வந்து தாய்மொழி தமிழையும் தொடர்ந்து கற்றுத் தேர்ந்து பல்கலைக் கழகப் பிரவேசப் பரீட்சையிலும் தமிழை ஒரு பாடமாகக.

(13 ஆம் பக்கம் பார்க்க...)

# வலி. வடக்கு சேந்தாங்குள கடற்கரை வீதிக்கு அடிக்கல்!

## நாட்டினார் தவிசாளர் சுகிர்தன்





வலி.வடக்கு பிரதேசசபைக்குச்சொந்த மான – பிரதேசசபை எல்லைக்குட்பட்ட – கடற்கரை வீதிக்கு இன்று சனிக்கிழமை காலை பிரதேசசபையின் தவிசாளர் சோ. சுகிர்தன் அடிக்கல் நாட்டிவைத்தார்.

மத்திய அரசாங்கத்தின் 'சப்ரிகம' வேலைத்திட்டத்தின்கீழ் 22 லட்சம் ரூபா செலவில் இந்த வீதி புனரமைக்கப்படவுள் ளது. இந்த வீதி பிரதேச சபைக்கு உருத்தா கையால், புனரமைப்புத் தொடர்பாக வலி.வடக்கு பிரதேசசபையில் அங்கீகார மும் பெறப்பட்டிருந்தது.

சேந்தாங்குளத்தில் அமைந்துள்ள இந்த வீதியைப் புனரமைக்குமாறு கடற் றொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கை களை முன்வைத்து வந்துள்ளனர். இந்த வீதி சேறும் சகதியுமாகக் காணப்பட்டமை யால் கடற்றொழிலாளர்களும் பொதுமக் களும் அதனூடாகப் பயணிக்கும்போது பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர்.

இந்த நிலையில் மத்திய அரசினூடாக வீதி புனரமைப்புக்காக 17 லட்சம் ரூபாவும், பாலம் புனரமைப்புக்காக 5 லட்சம் ரூபா வும் என 22 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்ட நிலையில், இன்று சனிக்கிழமை இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக தவிசாளர் சோ. சுகிர்தன் சம்பிரதாயபூர்வ மாக அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

தவிசாளருடன் பிரதேசத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு வலி.வடக்கு பிரதேசசபை உறுப் பினர் லயன் பா.மரியதாஸ், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.வடக்கு பிர தேச சபை உறுப்பினர் சி.செந்தூரன் ஆகியோர் இணைந்து அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

இந்த நிகழ்வில் பிரதேச பொதுமக்கள், கடற்றொழிலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

வலி. வடக்கு பிரதேசசபை பதவி யேற்று 2019 ஆம் ஆண்டுக் காலப்பகுதி யில் வலி. வடக்கு பிரதேச எல்லைக்குள் 200 இற்கும் மேற்பட்ட வீதிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அப் போதைய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசாவின் நிதியில் புனரமைப்பு செய்திருந்தது. ஆனால், எந்த வீதிகளுக்கும் அடிக்கல் நாட்டுதலோ அல்லது திறப்புவிழா மேற்கொள்தலோ இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

# வடக்கில் இரு வாரத்தில் 90 பேருக்குக் கொரோனா!

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர்



வடக்கில் இந்த மாதம் முதலாம் திகதி யிலிருந்து இதுவரை 90 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப் பட்டுள்ளதாக வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மருதனார்மடத்தில் பரவ ஆரம்பித்த கொரோனா தொற்று சுன்னாகம், சங்கானை, திருநெல்வேலி சந்தைகளுக் கும் பரவியுள்ளதாகவும், இதற்கும் தம் புள்ள சந்தைக்கும் தொடர்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மருதனார்மடம் சந்தையு டன் தொடர்புடைய 76 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என யாழில் கடந்த (வெள்ளிக்கிழமை) மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் குறிப் பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து குறிப்பிடு கையில் –

பண்டாரநாயக்க விமான நிலைய ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்பட்ட 325 பேரின் மாதிரிகளின் முடிவுகள் வெள்ளி காலை கிடைத்திருந்தன.

இதில், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை சேர்ந்த திருநெல்வேலி சந்தை வியாபாரியொருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார்.

இதேவேளை, முல்லேரியா வைத்தி யசாலைக்கு அனுப்பப்பட்ட 204 மாதிரிக ளின் முடிவுகள் கிடைத்துள்ள நிலையில், அதில் யாருக்கும் தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும், மருதனார்மடம் சந்தையு டன் தொடர்புடைய 110 பேருக்கு மேற் கொள்ளப்பட்ட பரிசோதனையில் உடு வில் பிரதேசத்தைச் சேர்ந்த இருவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த டிசெம்பர் முதலாம் திகதியிலிருந்து இதுவரை வடக்கில் 90 பேருக்கு கொரோனாத் தொற்று கண்ட றியப்பட்டுள்ளது.

இதில், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 78 பேர், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இருவர், வவுனியா மாவட்டத் தைச் சேர்ந்த ஒன்பது பேர் மற்றும் மன் னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் தொற் றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நால் வரைத் தவிர ஏனைய 74 பேரும் மருத னார்மட சந்தைப் பரம்பலுடன் தொடர்பில் உள்ளவர்கள் என வைத்தியர் கேதீஸ் வரன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மருதனார்மட சந்தை பரம் பலை தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து பொதுச்சந்தைகளிலும் பி.சி.ஆர். சோதனை நடத்தினோம். இதுவரை மரு தனார்மடம், சங்கானை, சுன்னாகம், திரு நெல்வேலி ஆகியவற்றில் தொற்று உறுதி யாகியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து சந்தைகளும் தொடர்புயைடயவை. எனவே மருதனார்மடத்தில் ஆரம்பித்த தொற்று ஏனைய 3 சந்தைகளுக்கு பரவி யுள்ளது. இந்த தொற்று தொடர்ந்து பரவ வாய்ப்புள்ளது. பொதுச்சந்தைகளுக்கும் தென்பகுதிக்கு – குறிப்பாக தம்புள்ளைக் கும் தொடர்புகள் உள்ளன.

எனவே, பொதுச்சந்தைகளுக்குள் தொற்று ஏற்பட்டு மக்களிற்கு தொற்று பர வலாம். பரம்பலை கட்டுப்படுத்த, வடக்கி லுள்ள அனைத்து பொதுச்சந்தைகளையும் மூட சிபாரிசு செய்துள்ளோம். தொற்று கட் டுக்குள் வந்ததும், சுகாதார நடைமுறைக ளைப்பின்பற்றிசந்தைகளைஆரம்பிக்கலாம்.

# விவசாய விஞ்ஞானிக்கான விருது கலாநிதி அரசகேசரிக்கு கிடைத்தது

கொழும்பு, டிசெ.20

2020 ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாய விஞ்ஞானிக்கான இலங்கை யின் தேசிய விருதை கலாநிதி அரச கேசரி கடந்த வெள்ளிக்கிழமை பெற்றுக் கொண்டார்.

வெங்காயம், மிளகாய், நிலக் கடலை, குரக்கன், கோதுமை போன்ற பயிர்களில் புதிய இனங்களை கண்டு பிடித்தமைக்காக கிளிநொச்சி இரணை மடுச் சந்தியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் மேலதிக பணிப்பாளரான கலாநிதி அரசகேச ரிக்கு இவ்விருது வழங்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த விருதை முதன்முதலாக தமிழர் ஒருவர் இந்த வருடம் பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை





**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1991.06.05
மதம் - இந்து V
நட்சத்திரம் - சதயம்
செவ் - 02இல்
பாவம் - 41 1/4
கல்வி - பட்டதாரி
தொழில் - வங்கி வேலை
எதிர்பார்ப்பு - வெளிநாடு

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1991.03.13
மதம் - இந்து V
நட்சத்திரம் - அவிட்டம் 1
பாவம் - 28
செவ் - 08இல்
கல்வி - கனடா பட்டதாரி
தொழில் - கனடா PR
எதிர்பார்ப்பு - கனடாவில் மணமகன் தேவை.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக் களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங் களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528



# தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்படும் நோயாளர்கள் அச்சப்படத் தேவையில்லை

## மன்னாரர் வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார் பொது வைத்தியசாலையின் தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்படும் நோயாளர்கள், தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்படுவதை நினைத்து பயமோ, பதற்றமோ அடைய வேண்டாம் என மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் செந்தூர்பதிராஜா தெரிவித்தார்.

நேற்று (சனிக்கிழமை) ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் செந்தூர்பதிராஜா மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் தனிமைப்படுத்தல் விடுதியில் 'கொரோனா' தொற்று உள்ளவர்கள் இருப்பார்கள் என எண்ண வேண்டாம்.

ஏனெனில் இங்கே கொரோனா என உறுதி செய்யப்பட்ட எந்த நோயாளரையும் வைத்து பராமரிப்பது இல்லை. உங்களைப் போன்ற கொரோனா தொற்றின் ஆரம்ப அறிகுறியென சந்தேகிக்கப்படும் தடிமன், இருமல், காய்ச்சல், தொண்டை வலி போன்றவற்றுடன் வேறு நோயின் காரணமாக விடுதிக்கு அனுமதிக்காக வரும் நோயாளர்கள் மற்றும் கொரோனா நோயின் அறிகுறி இல்லாமல் வேறு நோய்களுடன் வெளி மாவட்டங்களுக்குச் சென்று வந்ததன் காரணமாக விடுதிக்கு அனுமதிக்கப்படுபவர்கள் மட்டுமே இங்கு உள்ளார்கள்.

எனவே நீங்கள் பயப்படத் தேவையில்லை. விடுதிக்கு நீங்கள் அனுமதிக்கப்பட்டவுடன் பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்படும். அத்துடன் நீங்கள் என்ன நோயின் காரணமாக விடுதிக்கு அனுமதிக்கப்பட்டீர்களோ அதற்கான முழு சிகிச்சையும் உங்களுக்கு வழங்கப்படும்.

பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் வருவதற்கு இரண்டுநாள்கள் எடுக்கும். எனவே இந்த இரண்டு நாள்கள் மட்டுமே இந்தப் பிரிவில் நீங்கள் தங்க வைக்கப்படுவீர்கள்.

பி.சி.ஆர் முடிவு கொரோனா தொற்று இல்லை என முடிவு கிடைத்தவுடன் உங்களைச் சாதாரண விடுதிக்கு மாற்றி விடுவார்கள். பி.சி.ஆர் முடிவு கொரோனா என உறுதி செய்யப்பட்டால் மட்டுமே கொரோனா நோயார்களைப் பராமரிக்கும் வைத்தியசாலைக்கு நீங்கள் அனுப்பப்படுவீர்கள். எனவே தேவையற்ற பயம் கொள்ள வேண்டாம்.

இந்தப் பிரிவில் உங்களுக்குத் தேவையான சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மூன்று நேரமும் உணவு உங்களுக்கு வழங்கப்படும். வீட்டில் இருந்து உணவு பெறுவதாக இருந்தாலும் பெற்றுக்கொள்ளலாம்.

விசாலமான தனி அறை ஒன்றில் நீங்கள் தங்கவைக்கப்படுவீர்கள். உங்களுக்கு அங்கே பொதுவான உள்ளகத் தொலைபேசி உள்ளது. அதன் மூலம் '1124' என்ற எண்ணை அழுத்தி உங்கள் பிரிவில் பணிபுரியும் பணியாளர்களுடன் 24 மணி நேரமும் தொடர்பை ஏற்படுத்தி உங்களுக்கு தேவையானவற்றை அறிந்து கொள்ளலாம்.

உங்களுடன் கையடக்கத் தொலைபேசி வைத்துக்கொள்ளலாம். இதற்கான மின்னேற்றி (சாஜ்ஜர்) பயன்படுத்த முடியும். எந்த நேரமும் உங்கள் கையடக்கத் தொலைபேசி மூலம் உங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

உங்கள் அறையில் அழைப்பு மணி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இதனை அழுத்தினால் உங்கள் தேவைகளை அறிவதற்கு பணியாளர்கள் வருவார்கள். மேற்கூறப்பட்டுள்ள தொடர்புகள் உங்களுக்கு திருப்தியாகக் கிடைக்காவிடில் வைத்தியசாலை பொது தொலைபேசி இலக்கத்துக்கு (023 -2222349) உடன் தொடர்பு கொண்டு உங்களுக்குத் தேவையானவற்றை அறிந்து கொள்ளலாம்.

பார்வையாளர்கள் உங்கள் அறைக்கு வருகின்றமை அனுமதிக்கப்பட்ட மாட்டாது. எனவே உங்கள் தேவைகள் அனைத்தும் வைத்தியசாலை பணியாளர்கள் மூலமே பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே நோயாளர்களே தயவு செய்து நீங்கள் இப்பிரிவில் தங்கி இருக்கும் இரு நாள்களும் பொறுமையாக எங்களுடன் ஒத்துழையுங்கள். உங்களை கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாப்பதற்கே இந்த நடைமுறைகள் என்பதை உணர்ந்து செயற்படுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் அதிகமாக ஒன்றுகூடும் இடங்களை தவிருங்கள்!



சமூக நல அறிவிப்பு

கொரோனா பரவல் தொடர்பில் பரவும் கருத்துக்கள் மூலமாக மக்கள் விழிப்புணர்வு அடைகிறார்களோ இல்லையோ கண்டிப்பாக பெரும் குழப்பத்துக்கு ஆளாகின்றனர். இந்த நிலைமையை போக்க சரியான தகவல்களை முறைப்படி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

- பொருள்கள் வாங்குவதற்காக சந்தைகளுக்கோ அல்லது மக்கள் அதிகமாக கூடுகின்ற கடைகளுக்கோ அல்லது குளிரூட்டப்பட்ட கடைகளுக்கோ செல்வதை இக் காலப்பகுதியில் தவிர்த்து,உங்கள் வீட்டுக்கு அருகாமையிலுள்ள கடையில் மக்கள் குறைவாக உள்ள வேளைக ளில் பொருள்கள் வாங்குவதற்காக செல்லுங்கள்.
- கொரோனா வைரஸ் கிருமியானது மனிதர்களிடமிருந்தே மனிதர்களுக்குப் பரவுவதனால் இத்தொற்று அதிகமாக ஏற்படக்கூடிய இக் காலப்பகுதியில் மற்றவர்களுடனான தொடர்பினை மேற்கொள்வதற்கு இயன்றளவு தொலைபேசியினை உபயோகியுங்கள்.

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் கொரோனாத் தொற்றிலிருந்து உங்களையும், உங்கள் குடும்பத்தையும் பாதுகாக்கும்.

சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-



# முப்பது கோடி டோஸ்கள் தடுப்பூசி இந்தியாவில் 2021 இல் உற்பத்தி!




கொரோனா தடுப்புக்கான 30 கோடி டோஸ் கள் கொண்ட ஸ்புட்னிக் மருந்துகள் வரும் 2021 ஆம் ஆண்டில் இந்தியா உற்பத்தி செய்யும் என ரஷ்யா அறிவித்து உள்ளது.

உலக நாடுகளை அச்சுறுத்தி கொண்டிருக்கும் கொரோனா வைரஸின் பாதிப்புகளுக்கு இன்று காலை வரையில், 16 லட்சத்து 62 ஆயிரத்து 127 பேர் உயிரிழந்து உள்ளனர். 7 கோடியே 49 லட்சத்து 52 ஆயிரத்து 221 பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இந்தத் தொற்றில் இருந்து விடுபடுவதற்காக பல்வேறு நாடுகளும் தடுப்பு மருந்துகளை கண்ட றியும் சோதனை முயற்சியில் ஈடுபட்டுள்ளன. பல நாடுகள் பெருமளவில் வெற்றியும் அடைந்துள் ளன. இவற்றில் அமெரிக்காவின் பைசர், ரஷ்யா வின் ஸ்புட்னிக் உள்ளிட்ட தடுப்பு மருந்துகள் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி உள்ளன.

இந்நிலையில், ரஷ்ய நேரடி முதலீட்டு நிதி யமைப்பின் தலைவர் கிரில் டிமிட்ரியேவ், 'ராஸ் ஸியா 24' தொலைக்காட்சி சேனலுக்கு அளித் துள்ள பேட்டியில், ஸ்புட்னிக் தடுப்பு மருந்து தயாரிப்புக்கான 110 நிறுவனங்களில் இருந்து 10 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன.

அவை தேவையான மருந்துகளை உற்பத்தி செய்யும். இந்தியாவில் 4 பெரிய உற்பத்தி நிறு வனங்களுடன் நாங்கள் ஒப்பந்தங்கள் செய்துள் ளோம். கொரோனா தடுப்புக்கான 30 கோடி டோஸ்கள் கொண்ட ஸ்புட்னிக் மருந்துகளை அடுத்த ஆண்டு இந்தியா உற்பத்தி செய்யும் என அவர் தெரிவித்து உள்ளார்.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பு மருந்து 95 சதவீதம் திறன் வாய்ந்தது என்று அந்நாட்டு அதி பர் விளாடிமிர் புதின் நேற்று டுவிட்டர் வழியே தெரிவித்து உள்ளார். எனினும், சில சுகாதார நிபுணர்கள் இந்த தடுப்பு மருந்து 96 முதல் 97 சதவீதம் பாதுகாப்பு நிறைந்தது என கூறுகின்ற னர் என்றும் புடின் தெரிவித்து உள்ளார்.



# அமெரிக்க அரசு மீது சைபர் தாக்குதல்; முக்கிய பல துறைகளும் பேராபத்தில்!

அமெரிக்க அரசு மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டதை தொடர்ந்து அரசின் முக்கிய துறைகள் ஆபத்தில் இருப்பதாக அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்க அரசின் முக்கிய துறைகளின் கணினிகளில் ஹக்கர்கள் ஊடுருவி உளவு பார்த்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது. அமெரிக்க அரசின் முக்கிய துறைகளை குறிவைத்து பல மாதங்களாக இந்த சைபர் தாக்குதல் தொடர்ந்து நடந்து கொண்டிருந்ததை, அமெரிக்க அதிகாரிகள் தற்போது கண்டு பிடித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலால் அமெரிக்காவின் அரசு முகமைகள், முக்கிய அமைப்புகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆபத்தில் இருக்கின்றன என அதிகாரிகள் எச்சரித்து இருக்கிறார்கள். இந்த சைபர் தாக்குதலை தடுப்பது மிகவும் சிக்கலானது என அமெரிக் காவின் சைபர் பாதுகாப்பு மற்றும் கட்டமைப்பு பாதுகாப்பு முகமை (சி.ஐ.எஸ்.ஏ) கூறியுள்ளது. ரஷ்யா இந்தத் தாக்குதலை நடத்தி யிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. ஆனால் ரஷ்யா இதை மறுத்தி ருக்கிறது.

இந்த சைபர் தாக்குதல் குறித்து சி.ஐ.எஸ்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

இது மிக நுட்பமான, தொடர் தாக்குதல். இந்த சைபர் தாக்குதலில் அமெரிக்காவின் அரசு முகமைகள், முக்கிய அரசு அமைப்புகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் குறிவைக்கப்பட்டன. இந்த தாக்குதல், கடந்த மார்ச் மாதத்தில் தொடங்கி இருக்கலாம் என்று தெரிகிறது. இந்த சைபர் தாக்குதலுக்கு பின்னால் யார் இருக்கிறார்கள்? எந்த முகமைகள் மற்றும் அமைப்புகள் மீது இந்த தாக்குதல் நடந்தது, என்ன மாதிரியான விவரங்கள் திருடப்பட்டன என்பன உள்ளிட்டவை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

டெக்சாஸ் மாகாணத்தைச் சேர்ந்த சோலார் விண்ட்ஸ் என்கிற ஐ.டி. நிறுவனத்தின், நெட்வொர்க் மேனேஜ்மெண்ட் மென் பொரு ளைப் பயன்படுத்திதான், சைபர் தாக்குதல் நடத்தியவர்கள், அமெ ரிக்காவின் முக்கிய கம்ப்யூட்டர்களில் நுழைந்துள்ளனர்.

எனவே, சோலார் விண்ட்ஸ் நிறுவனத்தின் நெட்வொர்க் மேனேஜ் மெண்ட் மென்பொருளை, தங்களின் சர்வர்களில் இருந்து நீக்கு மாறு, அமெரிக்காவின் அனைத்து சிவில் முகமைகளுக்கும் அறி வுறுத்தப்பட்டிருக்கிறது. சோலார் விண்ட்ஸ் நிறுவனத்தின் மென் பொருளைத் தவிர, வேறு ஏதாவது வழிகளில் தாக்குதல் நடத்தி யவர்கள் நுழைந்திருக்கிறார்களா என்பதை விசாரித்து வருகிறோம்.

- இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள், அமெரிக்காவின் உள் துறை, பாதுகாப்பு, உள்நாட்டு பாதுகாப்பு, நிதி மற்றும் வணிகம் போன்ற துறைகளின் தரவுகளை உளவு பார்த்திருக்கலாம் என கூறப்படுகிறது. மேலும் அமெரிக்காவின் எரிசக்தித்துறை மற்றும் தேசிய அணுசக்தி பாதுகாப்பு நிர்வாகத்துறை ஆகியவை தொடர் புடைய நெட்வொர்க்குகளில், தாக்குதல் நடத்தியவர்கள் நுழைந் ததற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சைபர் தாக்குதல் பற்றி அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டிருக்கும் ஜோ பைடன் கூறுகையில், எனது நிர்வாகத் தில் சைபர் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். முதலில் சைபர் தாக்குதல்களை நடத்தும் எதிரிகளை நாம் தடுக்க வேண் டும். நம் கூட்டாளிகள் மற்றும் நம் நட்பு நாடுகளுடன் சேர்ந்து, இதுபோன்ற தீங்கிழைக்கும் தாக்குதல்களுக்கு காரணமான வர்கள் மீது கணிசமான அபராதங்களை விதிப்பதன் மூலம் அதைச் செய்வோம் எனக் கூறினார்.



# மாணவர்களின் குடியை குறைத்த கொரோனா

கொரோனா தொற்றால் கல் லூரி மாணவர்களிடையே மது பானம் குடிக்கும் அளவு குறைந் துள்ளது என புதிய அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

கொரோனா பாதிப்புகளை தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு களால் உலக நாடுகள் முடங்கி போன சூழலில் பொருளாதார மந்தநிலையும் ஏற்பட்டது. பள்ளி, கல்லூரி உள்ளிட்ட கல்வி நிலையங்கள் மூடப்பட்டன. பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த தியேட்டர்கள், வணிக வளாகங்கள் போன்றவையும், உடற்பயிற்சி கூடங்கள், சலூன் கள், ஸ்பாக்கள் உள்ளிட்டவை யும் கூட மூடப்பட்டன.

கல்வி நிலையங்களுக்கு கல்வி கற்பதற்காக செல்வது உருமாறி மதுபானம் குடிப்பது, கட் அடித்து விட்டு தியேட்டர்க ளுக்கு செல்வது, அரட்டை அடிப் பது போன்ற கேளிக்கை செயல் களில் ஒரு சில மாணவர்கள் ஈடுபடுவதும் அதிகரித்து காணப் பட்டது.

கொரோனா தொற்றால் கல்வி நிலையங்கள் மூடப்பட்ட சூழலில் மாணவர்கள் மதுபா னம் குடிக்கும் அளவு குறைந் துள்ளது என அல்கஹால் மற் றும் போதை பொருள் பற்றிய ஆய்வு முடிவுகளை ஜேர்னல் ஒவ் ஸ்டடீஸ் அறிக்கையாக வெளியிட்டு உள்ளது.

# பூமிக்கு அடியில் ஈரான் மேலும் ஓர் அணு உலையை அமைப்பதாகத் தகவல்

அமெரிக்காவுடனான பதற்றத்துக்கு மத்தியில் ஈரான் பூமிக்கு அடியில் மேலும் ஓர் அணு உலையை அமைப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட 6 வல்லரசு நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே கடந்த 2015 ஆம் ஆண்டில் கையெ முத்தான அணுசக்தி ஒப்பந்தத்தில் அமெரிக்கா கடந்த 2018 ஆம் ஆண்டு வெளியேறியது. அதன் பின்னர் ஈரான் மீது அமெரிக்கா கடுமையான பொருளாதாரத் தடைகளை விதி த்தது. இதற்குப் பதிலடியாக அணுசக்தி ஒப்பந்தத்தில் உள்ள முக்கிய நிபந்தனைகளை ஈரான் படிப்படியாக புறக்கணித் தது.

இந்த விவகாரத்தில் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே கடுமையான மோதல் நீடிக்கிறது. அதேசமயம் அமெரிக்காவுடனான பதற்றத்துக்கு மத்தியில் ஈரான் அணு ஆயுதத் திட்டங்களை தீவிரப்படுத்தி வருகிறது.

அதன்படி இஸ்பகான் மாகாணத்திலுள்ள நாதன்ஸ் நகரில் பூமிக்கு அடியில் புதிய அணு உலை அமைக் கும் பணிகளை ஈரான் தொடங்கியுள்ளதாக ஐ.நா. கண் காணிப் பாளர்கள் கடந்த அக் டோபர் மாதம் தெரி வித்தனர்.



இந்த நிலையில் ஈரான் பூமிக்கு அடி யில் மேலும் ஓர் அணு உலையை அமைப்ப தாக தற்போது தகவல் வெளியாகி யுள்ளது. குவாம் மாகாணத்தின் போர்டோ நகரில் அணு உலைக்கான கட்டுமானப் பணிகள் நடைபெறுவதை காட் டும் செயற்கை கோள் படங்கள் வெளியாகிப் பரபரப்பை ஏற் படுத்தியுள்ளன. எனினும் போர்டோ நகரில் அணு உலை கட் டப்படுவதை ஈரான் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளவில்லை.

அதேபோல் ஈரானின் அணு திட்டங்களை கண்காணித்து வரும் ஐ.நா. கண்காணிப்பாளர்களும் இதுகுறித்து உடன டியாக எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. வருகிற ஜனவரி 20ஆம் திகதி அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்கவுள்ள நிலையில், ஈரானின் புதிய அணு உலை குறித்த செய்தி சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.


# பிரபஞ்சத்தின் ஓரத்தில் இருந்து வெளியான சப்தம் வேற்றுக்கிரகவாசிகள் அனுப்பிய சப்தமா என ஆய்வு..!

பிரபஞ்சத்தின் ஒரு புறத்திலிருந்து பெறப்பட்ட ரேடியோ சமிக்ஞை அலைகள் வேற்றுக்கிரக வாசிகள் அனுப்பிய சப்தமா என விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தி வருகின்றனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஜேக் டர்னர், பிலிப் ஸர்க்கா மற்றும் ஜீன் மத்தியாஸ் ஆகி யோர் வானியல் குறித்து ஆய்வு நடத்தி வருகின்ற னர். அப்போது 51 ஒளி ஆண்டுகள் தூரத்தில் உள்ள கிரகத்தில் இருந்து ரேடியோ சமிக்ஞை ஒலிகள் வரு வதைக் கண்டறிந்தனர்.

இந்தச் சப்தம் தவ்பூடிஸ் என்ற நட்சத்திர அமைப் பில் இருந்து வெளியாகி இருக்கலாம் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அந்த சப்தம் வேற்றுக்கிரகவாசி கள் அனுப்பியவையா என்றும் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.



காலைக்கதிர் Kalaikkathir

பனங்காட்டான்

# ஜெனிவாவா? சர்வதேச நீதிமன்றமா? மூன்றிலிரண்டு முடிவெடுக்கட்டும்!

இப்போது முன்னாலுள்ள கேள்வி சுமந்திரனும் அவரது கூட்டமைப்பும் இன்று ஜெனிவா நிலைப்பாட்டில் எவ்விடத்தில் உள்ளனர் என்பதே. மூன்று தமிழ்த் தேசிய கட்சிகளில் இரண்டு ஜெனிவாவில் தொங்கியிருப்பதில் பிரயோசனமில்லை, அல்லது அர்த்தமில்லையென்று கூறினால் அவர்களுடன் இணைந்து சர்வதேச விசாரணைக்கு சுமந்திரன் உடன்படுவாரா? அல்லது 'தன்வழி தனிவழி' என்று தொடர்ந்து அவ்வழி செல்வாரா?

ஆங்கிலத்தில் "ஸ்குயர் வண்" என்றொரு சொற்பதம் உண்டு. அதாவது, ஏதாவதொன்றில் முன்னேற முடியாது மீண்டும் தொடங்கிய இடத்துக்கு அல்லது முன்னைய இடத்துக்குச் செல்வதென்பது இதன் அர்த்தம்.

இலங்கைத் தமிழர் அரசியலில் இப்பதம் எப்போதும் சாகாவரம் பெற்றது. மீண்டும் ஜெனிவாக் கூட்டத்தொடர் பற்றியே தமிழரின் அரசியல் கட்சிகளும் அவர்களின் தலைவர்களும் பேச ஆரம்பித்துள்ளனர். இதற்காக ஒற்றுமை அல்லது இணக்கம் என்பது தேடப்படுகிறது.

இலங்கை நாடாளுமன்ற அரசியலில் உதயமான முதலாவது தமிழர் அரசியல் கட்சி அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ். அதன் உருவாக்கத் தலைவர் (காலஞ்சென்ற) ஜி.ஜி. பொன்னம்பலம். 1947 ஆம் ஆண்டின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில் இவரோடு எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கு.வன்னியசிங்கம் ஆகிய இருவரும் காங்கிரஸ் கட்சி ஊடாகவே தேர்தலில் தெரிவாகினர்.

ஆனால், அடுத்த இரண்டாண்டுக்குள் தமிழ் காங்கிரஸிலிருந்து விலகிய செல்வநாயகமும் வன்னியசிங்கமும் தமிழரசுக் கட்சியை உருவாக்கி அதனைப் பலமடையச் செய்தனர். இதனால் காங்கிரஸ் படிப்படியாக செல்வாக்கிழந்தது.

சுட்ட மண்ணும் பச்சை மண்ணுமாகவிருந்த இவ்விரு கட்சிகளும் இருபத்தைந்து ஆண்டுகளின் பின்னர் - 1972 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் ஒன்றிணைய நேர்ந்தது காலத்தின் தேவையாகவிருந்தது.

இந்தக் கால்நூற்றாண்டில் இவ்விரு கட்சிகளும் அல்லது அவற்றின் தலைவர்களும் தமிழ் மக்களின் அரசியல் நலன் கருதி ஓரளவுக்காவது ஒற்றுமையாக அல்லது விட்டுக்கொடுக்கும் இணக்கப்பாட்டில் இயங்கியிருந்தால் தமிழர் வரலாறு வேறாகியிருக்கலாம்.

பின்னர் 1977 தேர்தலில் தமிழர் கூட்டணி உருவாகிய போதாவது கொள்கை அடிப்படையில் கட்சிகள் நேர்மையாக இணைந்து செயற்பட்டிருந்தால், சிங்கள தேசம் தமிழினத்தின் வாழ்வியலைத் தாம் விரும்பியவாறு மாற்றியமைக்க முடியாது போயிருக்கலாம்.

முப்பதாண்டு கால ஆயுதவழிப் போராட்டத்தின் ஆரம்பம் கூட தமிழர் அரசியல் கட்சிகளின் ஒற்றுமை



யின்மையாலேயே ஏற்பட்டது என்று கூறவேண்டும். இதனை உணர்ந்த நிலையில்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் 2002இல், எதிரும் புதிருமாகவிருந்த அனைவரையும் இணைத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உருவாக்கினர். காலத்தின் தேவையை ஒட்டிய இரண்டாம் கட்ட நடவடிக்கையாக இதனைப் பார்க்கலாம்.

முள்ளிவாய்க்காலில் போராட்டம் மௌன நிலைக்குச் சென்றதோடு கூட்டமைப்பின் ஒற்றுமை குலைந்தது. பெயரளவில் மட்டுமே 'கூட்டு' என்று இருந்ததே தவிர, நடைமுறையில் அது பிளவாகவே இருந்தது.

கடந்த ஒரு தசாப்த தமிழரின் ஏகபோக அரசியலில் ஏற்பட்ட ஏற்றமும் இறக்கமும் - ஒரு கட்சி அரசியல் பெற்றுத் தந்த ஏமாற்றமும், கடந்த ஒகஸ்ட் மாதப் பொதுத்தேர்தலில் ஒரு மாற்றத்தைக் காட்டியது. அதனூடாகப் பெரும்பான்மையை இழந்த தமிழரசுக் கட்சிக்குள் சிலர் பாடம் கற்றுக் கொண்டனர் என்றும் சொல்லலாம்.

அதன் பிரதிபலிப்பை இப்போது ஆங்காங்கு காணக் கூடியதாகவுள்ளது. உள்வீட்டுக்குள் தோற்றவர்களுக்கும் வென்றவர்களுக்கும் இடையில் நீயா, நானா என்ற தலைமைப்போட்டி ஆரம்பமாகியுள்ளது.

அதேசமயம், அந்த வீட்டுக்குள் வென்றவர்கள் தங்களின் ஆதரவுத் தளம் - வாக்கு வங்கி குறைந்தமையால் எதிர்கால நலனுக்காகவாயினும் அல்லது வெளிப்பார்வைக்காயினும் மாற்றுத் தலைமைகளை மதித்து அவர்களுடன் கூடிச் செல்வதாகக் காட்டவேண்டிய தேவைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.




> தன்னிச்சையாக இலங்கைக்கு இரண்டு வருட காலநீடிப்பு கொடுத்துத் தாமும் ஏமாந்து, தமிழ் மக்களையும் ஏமாற்றிய கூட்டமைப்பு இப்போது புதுநகர்வுகளை மேற்கொண்டுள்ளது தெரிகிறது.

எதனையும் இலகுவாக மறந்துவிடும் சுபாவம் கொண்டவர்களாகத் தமிழர்கள் இருக்கின்றமையால், சில தகவல்களை மேலோட்டமாக இங்கு குறிப்பிட நேர்ந்தது. இந்தப் பின்னணியில் நின்று தமிழர் தேசிய கட்சிகளுக்குள் இப்போது ஒற்றுமை, இணக்கம், விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு என்று பேசப்படுபவைகளைப் பார்க்க வேண்டும்.

ஜெனிவாவில் அடுத்த இரண்டு மாதங்களில் - 2021 பெப்ரவரி 22 முதல் மார்ச் 19 வரை - மனித உரிமைகள் அமைப்பின் அடுத்த கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது. 47 நாடுகள் அங்கம் வகிக்கும் இந்தக் கூட்டம் ஈழத்தமிழரைப் பொறுத்தளவில் மிகமிக முக்கியமானது.

2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி இலங்கை தொடர்பான 30/1 இலக்கத் தீர்மானம் இங்கு நிறைவேற்றப்பட்டது.

இலங்கையின் போர்க்குற்றம், பொறுப்புக்கூறல், சர்வதேச நீதிவிசாரணைப் பொறிமுறை ஆகியவற்றுக்கான இந் தீர்மானத்தை அமெரிக்கா முன்மொழிந்தது. அப்போதைய இலங்கை அரசு இதற்கு இணை அனுசரணை வழங்கியது. தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. தீர்மான முடிவுகளை நிறைவேற்ற இலங்கை அரசுக்கு மூன்று வருட அவகாசம் வழங்கப்பட்டது. பின்னர் மேலும் இரண்டு வருட காலநீடிப்பு வழங்கப்பட்டது.



அவ்வேளையில் இலங்கையில் ஆட்சியிலிருந்த மைத்திரிபால - ரணில் அரசுடன் தேனிலவில் கூடியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே முன்னின்று இக்கால நீடிப்பைப் பெற்றுக் கொடுத்தது. கூட்டமைப்பில் அங்கம் வகிக்காத மற்றைய தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகள் இதனை வன்மையாகக் கண்டித்தனவாயினும் அவர்களின் குரல்கள் எடுபடவில்லை.

காலநீடிப்பு முடிவடைய ஓராண்டு இருந்தவேளையில், ராஜபக்ஷக்களின் ஆட்சி இலங்கையில் உருவானது. இவர்கள் ஜெனிவா தீர்மானத்தை நிராகரித்தமையுடன், அதனை ஜெனிவா அமர்விலும் தெரிவித்தனர்.

ஐந்தாண்டு அவகாசம் முடிவடையும் காலமாக அடுத்த அமர்வு பெப்ரவரி - மார்ச்சில் வருகிறது. அடுத்த கட்டம் என்ன? பௌத்த தேசியவாதத்தை ஜெனிவா எவ்வாறு கையாளப் போகிறது? மூன்று கட்சிகளாகவுள்ள தமிழர் தேசியத் தரப்பு எவ்வாறு இங்கு செயற்படப் போகிறது?

கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் தேசிய கூட்டணி ஆகிய மூன்றையும் ஜெனிவா விடயத்தில் ஒரு குடையின்கீழ் கொண்டுவரத் திரைமறைவில் ஏதோ நடைபெறுவதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தன்னிச்சையாக இலங்கைக்கு இரண்டு வருட காலநீடிப்பு கொடுத்துத் தாமும் ஏமாந்து, தமிழ் மக்களையும் ஏமாற்றிய கூட்டமைப்பு இப்போது புதுநகர்வுகளை மேற்கொண்டுள்ளன தெரிகிறது.

2010 - 2020 பத் தாண்டு கால கூட்ட மைப்புக்குள் எல்லாமாக விருந்த சுமந்திரன், வரப் போகின்ற கூட்டத் தொடரில் சமர்ப்பிக்க ஓர் ஆவணத்தைத் தயாரித்து மற்றைய இரண்டு தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்ளான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சி.வீ. விக்னேஸ்வரன் ஆகியோரிடம் கையளித்துள்ளார்.

கடந்த தேர்தலில் கூட்டமைப்பு தனது தனித்தன்மையை இழந்தமையாலும், தமிழ் மக்கள் மாற்றுத் தலைமைகளாக கஜேந்திரகுமார், விக்னேஸ்வரன் தரப்பை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்தமையாலும், கூட்ட மைப்பின் சுமந்திரன் அவர்கள் இருவரையும் அனுசரித்துச் செல்ல வேண்டியமை தவிர்க்க முடியாததுஆயிற்று.

(15ஆம் பக்கம் பார்க்க)

# வெற்றிக்கான முழு மனத்துடனான செயற்பாடுகள்



நீங்கள் பருவ வயதை அடையும் முன்பு, **teen age** என்று சொல்கின்ற வயது, 13 இல் இருந்து 19 வயது வரை முற்பருவ வயது என்றும் இந்த காலத்தை சொல்லலாம். இந்த வயது, மிகவும் கவனமாகப் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளும் பருவம். இதில், தாய்,தந்தையர்கள் எவ்வளவு சிரத்தை எடுத்து, நல்லது , கெட்டது எது என்பதை அடையாளம் காட்டி, ஒழுக்கங்களை சொல்லிக் கொடுத்து, கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்படும் குழந்தைகள் நல்ல குழந்தைகளாக பரிணமிக்கின்றன.

20 இல் இருந்து 25 வயது வரை இளவயது தீலிற்ஐஆ ழி-ற்யிமி என்று சொல்லப்படுகின்ற வயது. இந்த டீன் வயது முதல் இளவயது வரை, நாம் அறிந்து கொள்ள வேண்டிய வியங்கள் அதிகம். அதில் , சில முக்கியவற்றை இங்கு பார்க்கலாம்:-

தாய், தந்தையர்கள் உடன் இணக்கமாக இருங்கள். இதுதான் தாங்கள் பயிலும் முதல் பல்கலை கழகமே ஆரம்பம். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்ற பாரதிதாசனின் வரிகளை நினைவு கொள்வோம்.

நல்லதொரு குடும்பத்தில்தான் நம் முதல் கல்வி ஆரம்பமாகிறது. இந்த நிலை பணத்தை பொறுத்து அல்ல என்பதை நன்றாக புரிய வேண்டும். உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல குணத்தை கற்றுக் கொடுங்கள், நீங்களும் அதை நடைமுறைபடுத்துங்கள். அதை பார்க்கும் உங்கள் பிள்ளைகளுக்கு, அதன் மேல் ஓர் அபரி மித ஈர்ப்பு வரும்.

காதல் என்ற பருவ வயது மயக்கத்தை விட்டும் நீங்கள் நீங்கி இருப்பது நலம். இதில் காயம் அடைந்தவர்கள் பலர். பயன் அடைந்தவர்கள் ஒரு சிலரே. இங்கு ஏமார்ந்து விடாதீர்கள். இது பெரிய கானல் நீர்.

உங்களுடைய திறமைகளை **(skill development)** நன்றாக வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களை நீங்கள் நன்றாக அறிய வேண்டும். இதை ஆங்கிலத்தில், **self - awareness** என்று சொல்வார்கள். இன்னும் தகவல் வேண்டும்என்றால், தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் தான் உங்களின் மதிப்பிட முடியா சொத்து. கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு, நெய்க்கு அலையாதீர்கள்.

உங்கள் நேரங்களை வீணாக செலவிடாதீர்கள். நேரம் விலை மதிப்பற்றது. **Time lost is never gained.** வீண்டிக்கப்பட்ட நேரங்களை திரும்ப பெற முடியாது. ஒவ்வொரு நாளும் நல்ல விடயங்களில் ஒன்று, இரண்டு கற்றுக் கொள்ளுங்கள். உங்களை அறியாமலேயே அது பல்கி பெருகி விடும் போது, அதன் மதிப்பை உணரும் போதும், நீங்களே திக்குமுக்கு ஆடுவீர்கள். இதை அனுபவிக்கும் போதுதான் அதன் அருமை தெரியும். சிறு சேமிப்பைப் போல.

நன்றாக வாசியுங்கள். புத்தகங்கள், செய்தித்தாள், பிரயோசனமான வார மற்றும் மாத இதழ்களை படியுங்கள். இது உங்கள் அறிவை வளர்க்கும் வல்லமை பெற்றது.

நன்றாக விளையாடுங்கள். உடற்பயிற்சி செய்யுங்கள். இது உங்கள் உள்ளங்களை மற்றும் உடலை சுகாதாரமாக வைத்துக் கொள்ள உதவும். **Sound mind in a sound body** என்ற நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை கடை பிடிக்க வேண்டும்.

இன்டர்நெட் மற்றும் மொபைல் போன்களை அதிகம் உபயோகிக்காமலும், அதில் நேரத்தை அதிகம் செலவிடாமலும் இருத்தல் நல்லது.

சொந்த பந்தங்கள், நண்பர்களுடன் நன்றாக கலந்துரையாடுங்கள். இது பல தகவல் மற்றும் பல வியங்களை தெரிந்து கொள்ள உதவும்.

நன்றாக உறங்குங்கள். அதிகாலையில் எழுங்கள். நீங்கள் நல்ல சுறுசுறுப்பாக இருக்க உதவும். இந்த பயிற்சி மூலம், நீங்கள் நேரத்தை உங்களால் கட்டுப்படுத்த முடியும். இல்லை என்றால், அதனுடைய கட்டுப்பாட்டுக்குள் நீங்கள் வந்து விடுவீர்கள். பின்பு, பதற்றமே உங்களை அலைக்கழிக்கும்.

உங்கள் எண்ணங்களை நன்றாக அறிந்து, உங்கள் மனக்கண் முன்பு தினமும் கொண்டு வந்து, அது நிறைவேறும் வரை அயராது உழைங்கள். முயற்சி திருவினை ஆக்கும் என்ற குறளை என்றும் மனதில் இருத்துங்கள்.

வாழ்வில் முழு வெற்றி அடைவேன் என்ற ஒரே எண்ணத்துடன் செயல் படுங்கள். வெற்றி அடைவீர்கள்.



# உண்மையை சொன்னால் மாட்டி கொள்வீர்களா?

உண்மையைச் சொல்வதால் நீங்கள் மாட்டிக் கொள்வீர்கள் என்றால் நீங்கள் ஏதோ தவறு செய்து இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

* தவறு என்பது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று.
* தவிர்த்திருந்தால் நீங்கள் மாட்டிக் கொண்டிருக்க மாட்டீர்கள்.
* தவறு செய்து அதை மறைத்துத் தான் பிழைக்க முடியும் என்று யார் சொன்னது?
* உண்மையைச் சொல்வதால் பிழைக்க முடியாது என்று பொருள் இல்லை.
* நேர்மையாக நடப்பவர்கள் நன்றாக வாழ்வது இல்லையா?
* தவறுகள் செய்து பொய் கூறியும் பிழைக்க முடியாமல் போவதுமுண்டு. (மாட்டிக்கொள்ளாமல் இருந்தும்கூட)
* தவறு செய்து தான் வாழ வேண்டும் என்றால் அப்படி ஒரு வாழ்க்கை/பிழைப்பு தேவையில்லை.
* தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் எனின் தர்மமே வெல்லும்.




**நாம் நமது எதிர்காலத்தை வீணாக்குகிறோம் என்பதற்கான அறிகுறிகள்:-**

1. எந்த ஒரு செயலையும் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என தள்ளி போடுவது.
2. எதிலும் பிடிப்பு இல்லாமல் இருப்பது.
3. தேவையே இல்லாத வீண் பேச்சுக்களில் ஈடுபடுவது.
4. கடந்த கால கசப்பான சம்பவங்களை அசை போட்டு கொண்டிருப்பது.

# பொருளாதார வெற்றிதான் வாழ்க்கையின் வெற்றி அல்ல



பொருளாதார வெற்றிதான் வாழ்க்கையின் வெற்றி என்று ஒரு நாளும் நினையாதே என்பது யாரும் யாரிடமும் சொன்னதில்லை. மற்றோருக்கு முன்னுதாரணமாக வாழ்ந்தவர்களும், படிக்கக் கிடைத்த புத்தகங்களும், சுய தேடல்களும் இந்த உண்மையைச் சரியான வயதிலேயே காட்டித் தந்து விடும்.

இன்னொரு முக்கிய விடயம் நம் நாட்டில் பொதுவாக நிலவுவதுதான். இது:- கலவி, ஆண் - பெண் உடலுறவு, ஆண் - பெண் இருவருக்கும் இடையே உள்ள மனவியல் ரீதியான உணர்வு வித்தியாசங்கள் இவை பற்றியெல்லாம் சரியான அறிவை யாரும் சொல்லித்தர மாட்டார்கள்.

மோசமான நண்பர்கள் மூலம் அரைகுறையான அறிவை/ வழிகாட்டலைப் பெறுபவர்கள் பலர். நுண்மையும் இனிமையும், நயமும், திறமையும் உள்ளடக்கிய காமக் கலையை தரம்கெட்ட செயற்பாடுகள் மூலம் அரை குறையாயும் தவறாயும் அறிந்து செயல்படுகின்றனர்.

இளம் வயது முதலேயே ஆன்மீகம் சார்ந்த மத நம்பிக்கையையை / தெய்வ நம்பிக்கையை வளர்த்துக்கொள் என்று யாரும் இப்போது எடுத்து சொல்லுவதில்லை. அவரவர்கள், அவரவருக்குத் தெரிந்த அரைகுறை உலகியல் பக்தி, குருட்டு நம்பிக்கை, மதம், தெய்வம் சார் குறுகிய புத்தி என்று தமது அறிவுக்கு எட்டிய அளவிலேயே இதுதான் சரி, இது போதும் என்கிற விதத்தில் தான் சொல்லிக் கொடுக்கிறார்கள். நமக்கான சரியான தேடல் இருந்தால்,சரியான புத்தகங்களும், குருமார்களின் உபதேசங்களும் கண் திறந்து வழி காட்டுகின்றமை மறுக்க முடியாதஉண்மை.

நீ நினைப்பது போலவே மற்றவர்களும் நினைக்க மாட்டார்கள்; நீ ஒன்றைச் சரியாகப் புரிந்து கொள்வதைப் போலவே மற்றவர்களும் புரிந்துகொள்ள மாட்டார்கள்; நீ உண்மை பேசினால் மற்றவர்களும் உண்மை பேசுவார்கள் என்று நினைக்காதே; நீ நேர்மையாக நடந்தால் மற்றவர்களும் அப்படி நடப்பார்கள் என்று நினைக்காதே என்றெல்லாம் எனக்கு உலக நடப்பைப் பற்றி யாரும் சொல்லித்தரவில்லை. ஓரளவு வயது வந்து உலகம் புரியும் வரையில் நீ இவற்றையெல்லாம் சரியாகப் புரியாத, அறியாத அப்பாவியாகதான் இருப்பாய். புரிந்து செயற்பாடு மனிதா.

# எங்களை அனைத்துத் தீமைகளில் இருந்தும் புனித சூசையப்பர் பாதுகாக்க மன்றாடுவோம்!

## குருமுதல்வர் பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார் செய்தி



புனித சூசையப்பர் எம்மை அனைத்துத் தீமைகளிலிருந்தும் பாதுகாக்க மன்றாடுவோம் என யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

திருத்தந்தை பிரான்சிஸ் 08 டிசெம்பர் 2020 தொடக்கம் 08 டிசெம்பர் 2021 வரையிலான காலப்பகுதியில் புனித சூசையப்பர் ஆண்டு எனப் பிரகடனப்படுத்தியுள்ளமை பற்றி காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழுக்கு கருத்து தெரிவிக்கும் போதே யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் கலாநிதி பீ.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

புனித சூசையப்பரை உலகளாவிய திரு அவையின் பாதுகாவலராக திருத்தந்தை 9ஆம் பத்திநாதர் அறிவித்ததன் 150ஆம் ஆண்டு நிறைவில் திருத்தந்தை பிரான்சிஸ் 08 டிசெம்பர் 2020 தொடக்கம் 08 டிசெம்பர் 2021 வரையிலான காலப்பகுதியை புனித சூசையப்பர் ஆண்டு எனப் பிரகடனப்படுத்தியுள்ளார் என்றார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இந்த ஆண்டை யாழ் மறைமாவட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு 09 டிசெம்பர் 2020 அன்று கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. பாசையூர் பங்குத்தந்தை ஜெறோ செல்வநாயகம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற திருப்பலியைத் தொடர்ந்து மறை மாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் புனித சூசையப்பரின் கொடியை ஏற்றி, கனவு காணும் சூசையப்பரின் திருவுருவத்தை ஆசீர்வதித்து, புனித சூசையப்பரின் ஆண்டை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

புனித சூசையப்பரின் ஆண்டை பிரகடனம் செய்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் இந்த ஆண்டு முழுவதிற்குமான சிறப்புச் சலுகையைப் (பரிபூரண பலன்) பெற்றுக் கொள்வதற்கு வழிகளையும் அறிவித்துள்ளார்.

1. அருட்சாதனத்தின் வழியாகப் பாவ மன்னிப்பைப் பெறுதல்.

2. தூய நற்கருணை விருந்தில் பங்குபெறல்.

3. திருத்தந்தையின் கருத்துக்களுக்காக செபித்தல்.

4. அனைத்துப் பாவச் செயல்களிலிருந்தும் விலகியிருத்தல்.

- என்பனவே அவையாம்.

# திருத்தந்தையின் கிறிஸ்மஸ் கால திருவழிபாடுகள்



தற்போதைய கொவிட் - 19 கொள்ளைநோய் விதிமுறைகளுக்கு உட்பட்டு திருத்தந்தை பிரான்சிஸ் குறைந்த அளவு விசுவாசிகளின் பங்கேற்புடன் டிசம்பர் 24ஆம் திகதி உரோம் நேரம் இரவு 7.30 மணிக்கு வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவிலில் கிறிஸ்மஸ் பெருவிழா நள்ளிரவு திருப்பலியை நிறைவேற்றும் திருத்தந்தை, 25ஆம் திகதி கிறிஸ்மஸ் பெருவிழாவன்று நண்பகலில் ஊர்பி எத் ஓர்பி ஆசீர் வழங்குவார்.

ஜனவரி முதல் நாள் உரோம் நேரம் காலை பத்து மணிக்கு வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவிலில் கடவுளின் தாய் புனித கன்னி மரியா பெருவிழா மற்றும் 54ஆவது உலக அமைதி நாள் திருப்பலியை தலைமையேற்று நிறைவேற்றுவார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நிறைவேற்றும் அனைத்து திருவழிபாடுகளிலும், விசுவாசிகளின் பங்கேற்பு மிகக் குறைவான எண்ணிக்கையில் இருந்தாலும் அவை அனைத்தும் ஊடகங்கள் வழியாக நேரடி ஒலி மற்றும் ஒளிபரப்பு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குனர் எஸ்.இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் ஆயிரத்திற்கும் அதிகமான பாய்களை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்குமாறு அரச அதிபரிடம் வழங்கிய போது எடுக்கப்பட்ட படம் இதுவாகும்.



# பூவுலகில் கிறிஸ்து பிறப்பின் ஒளியை கொள்ளைநோய் மறைத்துவிட முடியாது

## திருத்தந்தை பிரான்சிஸ் நம்பிக்கைச் செய்தி

இந்தக் கொள்ளைநோய்க் காலத்திலும் உலகில் கிறிஸ்து பிறப்பை நோக்கிய தயாரிப்புகள் சிறப்பான விதத்தில் இடம்பெறுவது குறித்து தன் மகிழ்வினை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் எந்தக் கொள்ளைநோயாலும் கிறிஸ்து பிறப்பின் ஒளியை அணைத்துவிட முடியாது என தெரிவித்தார்.

கொள்ளைநோயால் துன்பங்களை அனுபவித்துவரும் இன்றைய உலகில் நாம் வீடுகளில் அமைக்கும் கிறிஸ்மஸ் மரங்களும் குடிலும் நம்பிக்கையின் அடையாளங்களாக உள்ளன என உரைத்த திருத்தந்தை, இந்த அடையாளங்களின் வெளி அர்த்தத்தையும் தாண்டிச் சென்று நாம் இவற்றின் வழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ள இறை அன்பை முற்றிலுமாக புரிந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுத்தார். எந்த ஒரு கொள்ளைநோயோ அல்லது நெருக்கடியோ கிறிஸ்து பிறப்பின் ஒளியை மறைத்து விடமுடியாது. ஆகவே அந்த ஒளி நம் இதயங்களுக்குள் புகவும் உதவி தேவைப்படுவோரை அணுகவும் அனுமதிப்போமாக என உரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் கடவுள் மீண்டும் நமக்குள்ளும் நம் நடுவிலும் பிறப்பெடுக்க உள்ளார் என கூறினார்.

# இறைமகன் கொணர்ந்த மாபெரும் மகிழ்வை கண்டுணர்வோம் எனத் திருத்தந்தை அழைப்பு

இவ்வுலகில் மனுஉரு எடுத்த இறைமகன் கொணர்ந்த மாபெரும் நம்பிக்கை மற்றும் மகிழ்வை துன்பம் நிறைந்த இக்காலக்கட்டத்தில் மீண்டும் கண்டுணர நாம் அனைவரும் முயற்சி ஒன்றை மேற்கொள்வோம் என திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக்கொண்டார்.

மேலும் 11 டிசம்பர் 2020 அன்று மாலை ஐந்து மணிக்கு கொவிட் - 19 கொள்ளைநோய் விதிமுறைகளுக்கு உட்பட்டு வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் கிறிஸ்மஸ் குடில் திறந்து வைக்கப்பட்டது. இந்த கிறிஸ்மஸ் குடில் மற்றும் கிறிஸ்மஸ் மரம் ஆகியவை வருகிற 2021ஆன் ஆண்டு ஜனவரி மாதம் 10ம ஆம் திகதி ஆண்டவரின் திருமுழுக்கு விழா வரை வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் வைக்கப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

16ஆம் நூற்றாண்டிலிருந்து வெண்களி மண் பொருள்கள் செய்வதில் புகழ்பெற்ற இத்தாலியின் காஸ்ரெலி நகர் இந்தக் குடிலை நன்கொடையாக வழங்கியுள்ளது. மேலும் 28 மீட்டர் உயரமுடைய கிறிஸ்மஸ் மரத்தை சுலோவேனியா நாடு நன்கொடையாக வழங்கியுள்ளது.

ஐரோப்பாவிலேயே மிக உயரமான ஊசியிலை மரம் சுலோவேனியா நாட்டில் உள்ளது. இந்த மரத்தின் உயரம் 61.80 மீட்டராகும். ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகள் பழமைவாய்ந்த இந்த மரம் மூன்று மீட்டர் மற்றும் 54 சென்டி மீட்டர் சுற்றளவையும், ஒரு மீட்டருக்கு அதிகமான விட்டத்தையும் கொண்டிருக்கிறது.

# கிறிஸ்தவர்களும் உலகின் மக்கள் அனைவரும் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்குவோம்

## கிறிஸ்தவ சபைகளின் உலக அவையின் கிறிஸ்மஸ் செய்தி

கொவிட் - 19 கொள்ளைநோய் உருவாக்கியுள்ள நெருக்கடி காலத்தில் கிறிஸ்துவின் பிறப்பு நம்பிக்கை தரும் நல்லதொரு செய்தியாக இவ்வுலகை வந்தடைகிறது எனத் தெரிவித்து கிறிஸ்தவ சபைகளின் உலக அவை சிறப்புச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

2020ம் ஆண்டுக்குரிய கிறிஸ்மஸ் செய்தியில் கிறிஸ்தவர்களும் உலக மக்கள் அனைவரும் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்கவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் அந்த அவையின் தலைவர்.

மனித வரலாற்றின் மிகவும் கடினமான ஒரு காலத்தில் வாழும் நாம் நம்பிக்கையிழந்து விரக்தியடைய பல காரணங்கள் இருந்தாலும் கிறிஸ்துவின் பிறப்பு என்ற நற்செய்தி கொணரும் நம்பிக்கை நமக்கு ஆறுதல் அளிக்கிறது என்று இச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

சமுதாய இடைவெளி, குறைவான எண்ணிக்கையில் பங்கேற்பு, முகக்கவசங்கள் என்று பல்வேறு வழிகளில் நம் வழிபாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்பதும் இந்தக் கொள்ளைநோயினால் இறந்தோரின் நினைவுகள் இன்னும் சுமையாக உள்ளன என்பதும் இவ்வாண்டின் கிறிஸ்மஸ் விழாவை பாதித்துள்ளன என்பதை செய்தியில் அவர் நினைவுகூர்ந்துள்ளார்.

# கணினியை மாணவர்கள் தொடர்ந்தும் பயன்படுத்துவதால் பார்வைக் கோளாறு

## கண் வைத்திய நிபுணர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.20

மாணவர்கள் கணனியில் தொடர்ந்து பார்வையை செலுத்திவருவதன் காரணமாக பார்வைக் கோளாறுக்கு ஆளாகி நாளொன்றுக்கு 20 - 30 பேர் சிகிச்சைக்காக வருகின்றனர். அதனால் ஒன்லைனில் படிக்கும் மாண வர்கள் 20 நிமிடத்துக்கு ஒருமுறையேனும் ஓய்வெடுத் துக் கொள்ளவேண்டும்.

இது தொடர்பாக அரசாங்கம் மாணவர்களுக்கு அறிவுறுத்தவேண்டும் என மாத்தறை பெரிய வைத்தி யசாலை கண் சிகிச்சை விசேட வைத்திய நிபுணர் பிரியங்க இத்தவெல தெரிவித்துள்ளார்.

அதனால் ஒன்லைன் கல்வியை மேற்கொள்ளும் மாணவர்கள் கணினியை அல்லது கையடக்க தொலை பேசியை தொடர்ச்சியாகப் பார்க்காமல், 20 நிமிடத்துக்கு ஒரு முறை 20 செக்கன்களேனும் ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டும். ஆசிரியர்களும் இத. தொடர்பில் அறிந்துகொண்டு மாணவர்களுக்கு அதன் பிரகாரம் ஓய்வு வழங்கவேண்டும்.

அத்துடன் ஒன்லைனில் படிக்கும் முறையை மாண வர்களுக்கு தெளிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

# ஆழ்கடலில் உயிரை....

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கற்றுத்தேறிய பிள்ளைகளும் உன்னைப்போன்று ஆழ் கடலில் உயிரைப் பணயம் வைத்து வந்தவர்களில் அடக் கம். இந்தசெய்திகளை நீ அறியவில்லையா..? அல்லது உனக்கு அறிவிக்கப்படவில்லையா..?

கண்ணுக்குத் தெரியாத எதிரியாக இந்த கொரோனோ வைரஸ் தொற்று நீ புகலிடம் பெற்ற நாட்டிற்கு மாத்திரம் உரித்தானதா? நீ பகுதிநேரமாக வேலை செய்த இடத்தில் வேலையை இழக்க நேரிட்டால், மாற்றுவழியைக் காணு வதை விடுத்து, தற்கொலைதான் அதற்கு மாற்றுத்தீர்வு என்ற முடி வுக்கு எப்படி வந்தாய்..?

'உனக்கும் கீழே வாழ்பவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு' என்ற வரிகளை ஒவ்வொரு வரும் மனதில் தேக்கவேண்டிய காலகட்டத்தைத் தான் கடந்துகொண்டிருக் கிறோம் என்பதையும்மறந்துவிட்டாயா..?

கடந்த செவ்வாய்க்கிழமை 15 ஆம் திகதி சேலில் நடந்த செல்வன் வருணின் இறுதி நிகழ்விற்கு என்னை அழைத் துச்சென்ற சட்டத்தரணி ரவீந்திரன் குடும்பத்தினரையும், விக்ரோரியா தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த அன்பர் திரு. முருகேசு பரமநாதனையும் தவிர அங்கிருந்த எவரையும் எனக்குத் தெரியாது.

செல்வன் வருணும் அவனது தாயும் தங்கையும் இந்த நாட்டிற்குள் வந்த சில வருடங்களிலேயே பலரை நண் பர்களாகவும் தேடிக்கொண்டு குடும்ப சிநேகிதர்களாக்கியுமி ருப்பதையும் அவர்கள் வழங்கிய தார்மீக ஆதரவிலும் அர வணைப்பிலும் தேறு தல்களிலும் தெரிந்துகொள்ளமுடிந்தது.

வருணின் இறுதி நிகழ்விற்குச் சென்று அவனது நல் லடக்கம் வரையில் நின்று பின்னர் அவன் இல் லத்திற்கும் சென்று திரும்பினோம்.

பல இளைஞர்கள் வந்தவர்களை வர வேற்பதிலும் வருண் நினைவாக வழங்கிய உபசரிப்பிலும் அக்கறை காண்பித்தார்கள்.

ஆயிரம் சொந்தம் நம்மைத்தேடிவரும். ஆனால், தேடினாலும் கிடைக்காத ஒரே சொந்தம் நல்ல நண்பர்கள்தான்.

நண்பர்கள் பலரை சம்பாதித்த வருண், தற் கொலைக்காக அந்த உயர்ந்த கட்டடத்தில் ஏறும்போது ஒரு கணம் அந்த நண்பர்களை யும் தனக்கு பாலூட்டி உணவூட்டி சீராட்டி வளர்த்த தாயையும் நினைக்கத் தவறியமை கொடுமைதான்.

கடந்த 2019 ஆம் ஆண்டு வெளிவந்த தாம ரைச்செல்வியின் 'உயிர்வாசம்' நாவலும் ஆஸ்திரேலி யாவுக்கு படகில் வந்த மனிதர் களின் கதைதான்.

அதில்வரும்காந்தன்என்ற இளைஞனின் தற்கொலை முயற்சியுடன் அவன் மருத்துவ மனை யில் அனுமதிக்கப்பட்ட பின்னணியில் சுற்றிச்சுழல்கிறது, வன்னிப் பெருநிலப்பரப் பும் ஆழ்கடல் பயணமும். அகதிகளை ஆற் றுப்படுத்தக்கூடிய சீரிய படைப்பு உயிர்வாசம்.

இந்த நாவலை இங்கிருக்கும் படகில் வந் துள்ள இளைஞர்கள் அவசியம் படிக்கவேண் டும் என்றும் பரிந்துரைசெய்கின்றேன்.

அகதியாக வந்து பல துறைகளில் சாதனை நிகழ்த்தியவர்களின் பட்டியல் இருக்கிறது. சில வருடங்களுக்கு முன்னர் மெல்பனில் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம், நடத் திய அரங்கில் காண்பிக் கப்பட்ட ஆவணப்படத் தையும் பார்த்திருக்கின்றேன். அதனைத் தயாரிப்பதற்கு முன்னர் அந்த அமைப் பினைச் சேர்ந்த சிலர் என்னையும் வந்து சந்தித்து பேட்டி கண்டனர்.

அத்துடன் நான் இந்த நாட்டுக்கு 1987 இல் அகதியாக வந்தபின்னர் தொடங்கிய - ஈழப் போர்க்காலத்தில் பெற்றவர்களை இழந்த தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச் சிக்கு உதவும் - இலங்கை மாணவர் கல்வி நிதியத்தைப்பற்றியும் கேட்டறிந்துவிட்டு தங்கள் பங்களிப்பையும் வழங்கினர்.

இலங்கை மாணவர் கல்வி நிதியம் கடந்த 32 வருடங்களுக்கும் மேலாக தங்கு தடை யின்றி இயங்கி வருகிறது.

அது தொடங்கப்பட்ட காலத்திற்குப்பின்னர் இந்த நாட்டில் பிறந்த தமிழ் குழந்தைகள் வளர்ந்து, தற்போது அதன் நிர்வாகப் பணிகளில் முக்கிய பங்கேற்றுள்ளனர்.

அவர்களின் பெற்றோரும் அகதியாக வந்தவர்கள்தான்.

இந்த நாட்டில் இயங்கும் தமிழ் அமைப்பு களும், படகுகளில் வந்துள்ள புகலிடக் கோரிக்கையாளர்களும் பரஸ்பரம் தொடர் பாடல்களையும் மேற்கொண்டு விழிப் புணர்வு நடவடிக்கை களில் ஈடுபடல்வேண்டும்.

வாழ்க்கை வாழ்வதற்குத்தான்.

செல்வன் வருண்ராஜ் ஞானேஸ்வரனின் தற் கொலை போன்று கடந்த காலத்திலும் புகலிடக் கோரிக்கையாளர்களின் தற்கொலை மரணங்கள் நிகழ்ந்துள்ளன எனச் சொல்லிக் கொண்டு ஆஸ்தி ரேலிய குடிவரவு அமைச்சும், ஊடகங் களும் சமூ கமும் கடந்து சென்றுவிடலாம்.

ஆனால், தற்கொலைகளும் ஒரு வகையில் சமூகத் தொற்று நோய்தான். அதனை மேலும் பரவ விடாமல் தடுப் பதற்கான விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் ஆக்கபூர்வ மாகத் தொடரவேண்டும்.

தொடர்பாடல்கள் பல்கிப் பெருக வேண்டும்.

கொரோனாவால் சமூக இடைவெளி தோன்றலாம். ஆனால் மனித உணர்வுகளுக்கு இடைவெளி இல்லை.

செல்வன் வருணுக்கு எமது இதய அஞ்சலி செலுத்தி ய பின்னர், மற்றும் ஒரு அதிர்ச்சியான செய்தி குவின்ஸ் லாந்து மாநிலத்திலிருந்து வந்தது.

படகு மூலம் அவுஸ்திரேலியா வந்திருக்கும் மட்டக் களப்பு, பட்டிருப்புத் தொகுதி மண்டூரைச் சேர்ந்த கிசோபன் ரவிச்சந்திரன் என்ற 25 வயது இளைஞரும் இம்மாதம் 02 ஆம் திகதி தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

அவுஸ்திரேலியா அரசும், தமிழ் சமூக அமைப் புகளும் படகு மக்கள் தொடர்பாக தற்கொலைகளைத் தடுக்கும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களைத் துரிதப்படுத்த விரைந்து செயல்படல் வேண்டும் என்பதையே இந்தத் தொடர் தற்கொலை மரணங்கள் உணர்த்துகின்றன.

# புரெவி புயலால் பெரிதும் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பப் பெண்களின் நெருக்கடி

வடக்கு - கிழக்கு மாகாணங்களை அதிகளவில் பாதித்த புரவி புயல் கரையை கடந்து சொன்றாலும் அதன் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், அதன் கோர விளைவுகளை கடந்து செல்ல முடியாத நிலையில் இன்று வரை உள்ளனர்.

மீன் பிடியை வாழ்வாதாரமாக கொண்ட பல மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள், வலைகள், படகுகள் கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டும் நொருக்கப்பட்டும் உள்ளன.

இதனால் பல மீனவ பெண்களின் வாழ்கை வறுமை யால் பீடிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று வரை என்ன செய்வது என்று அறியாமல் அவர்கள் தவிக்கின்றனர்.

இவைஒருபுறம்இருக்க, மீனவர்களின்வலைகளிலும் ட்ரோலர் படகுகளின் மடிகளில் மிஞ்சுகின்ற சின்ன, சின்ன மீன்களை சேகரித்து அவற்றை கருவாடாக்கி வாழ்வாதாரத்தை கொண்டும் செல்லும் பெண்களின் நிலை கேள்விக் குறியாகவே உள்ளது.

நாள் ஒன்றுக்கு 150 ரூபா தொடக்கம் 200 ரூபா என சிறியதொரு வருமானத்துக்காக காலை தொடக்கம் மாலை வரை மீனவர்களுக்கு வலை சீராக்கி கொடுத்தும், வலைகளில் கைவிடப்படுகின்ற சிறிய மீன்களை கருவாடாக மாற்றி அவற்றை விற்பனை செய்து வாழ்வாதாரத்தை கொண்டு சென்ற பெண்கள், கடந்து சென்ற புரெவி புயலால் தொழிலையும் இழந்து வாழ்வாதாரத்தையும் இழந்து செய்வதறியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.



கல்யாண மாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்

பிறந்த திகதி - 1988.04.03 மதம் - இந்து V
நட்சத்திரம் - சித்திரை (4) தொழில் - கனடா PR
கல்வி - SLIT கனடா கல்வி பட்டதாரி
எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண்.

பிறந்த திகதி - 1980.03.29 மதம் - இந்து V
நட்சத்திரம் - பூரம் பாவம் - 42 1/4
கல்வி - A/L தொழில் - சுவிஸ் PR
எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண்.

பிறந்த திகதி - 1976.12.15 மதம் - இந்து V
நட்சத்திரம் - அர்த்தம் பாவம் - 33 1/2
கல்வி - UK கல்வி பட்டதாரி தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - படித்த பெண்.

பிறந்த திகதி - 1990.09.07 மதம் - இந்து V
நட்சத்திரம் - ரேவதி பாவம் - 17
செவ் - 1 இல் கல்வி - பட்டதாரி
தாழில் - சுவீடன் PR
எதிர்பார்ப்பு- படித்த அழகான பெண்.

பிறந்த திகதி - 1989.06.08 மதம் - இந்து V
நட்சத்திரம் - ரேவதி பாவம் - 41
கல்வி - HND தொழில் - கனடா PR
எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண்.

பிறந்த திகதி - 1985.05.01 மதம் - இந்து V
நட்சத்திரம் - பூரம் பாவம் - 06 4/3
கல்வி - AL தொழில் - சுவிஸ் PR
எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண்.

பிறந்த திகதி - 1988.06.02 மதம் - இந்து V
நட்சத்திரம் - அவிட்டம் 1 பாவம் - 33
செவ் - 4 இல் கல்வி - AL
தொழில் - கனடா PR எதிர்பார்ப்பு - படித்த பெண்.

மணமகள் விவரம்

பிறந்த திகதி - 1991.03.13 மதம் - இந்து V
நட்சத்திரம் - அவிட்டம் (1) பாவம் - 28
செவ் - 8 இல் தொழில் - கனடா PR
கல்வி -முகாமைத்துவ வியாபாரம் பட்டதாரி, கனடா கல்வி
எதிர்பார்ப்பு - கனடா மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1994.05.14 மதம் - இந்து V
நட்சத்திரம் - திருவாதிரை பாவம் - 053/4
சூரி/செவ் - 6 இல் தொழில் - கனடா PR
கல்வி - கனடா கல்வி, பட்டதாரி
எதிர்பார்ப்பு - சூரி/ செவ் 3, 5, 6, 9, 10 மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1986.08.21 மதம் - இந்து V
நட்சத்திரம் - சதயம் பாவம் - 27 1/2 செவ் - 4 இல்
கல்வி - கனடா கல்வி, பட்டதாரி தொழில் - கனடா PR
எதிர்பார்ப்பு - படித்த மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1977.10.08 மதம் - இந்து V
நட்சத்திரம் - ஆயிலியம் பாவம் - 46 1/4
தொழில் - ஆஸ்திரேலியா PR
கல்வி - ஆஸ்திரேலியா கல்வி பட்டதாரி
எதிர்பார்ப்பு - ஆஸ்திரேலியா மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1988.06.08 மதம் - இந்து V
நட்சத்திரம் - பூரட்டாதி 3 பாவம் - 47
செவ் - 12 இல்
கல்வி - கனடா கல்வி, பட்டதாரி
தொழில் - கனடா PR கனடாவில் ஆசிரியை, அழகான பெண்.
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1991.06.19 மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - உத்திரம் 1 பாவம் - 56 1/4
செவ் - 1 இல் தொழில் - UK PR
கல்வி - UK கல்வி, பட்டதாரி
எதிர்பார்ப்பு - பட்டதாரி, இலங்கை விரும்பத்தக்கது.

பிறந்த திகதி - 1994.04.19 மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - பூசம் பாவம் - 50
செவ் - 1 இல் தொழில் - கனடா UK
கல்வி - கனடா கல்வி, பட்டதாரி
எதிர்பார்ப்பு - பட்டதாரி, இலங்கை விரும்பத்தக்கது.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாண் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415/ 077 8578 528

காலைக்கதிர் Kalaikkathir

# மருதனார்மடம் கொரோனா கொத்தணி காரணம் போதைப்பொருள் கடத்தலா?

மருதனார்மடம் கொரோனா வைரஸ் கொத்தணிக்கு கொழும்பிலிருந்து போதைப்பொருள் கடத்தி வரும் நடவடிக்கையே காரணம் என்று நம்பப்படுகிறது.

எனவே, இந்த விடயம் தொடர்பாக முறையான விசாரணையை பொலிஸார் ஊடாக முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மருதனார்மடம் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட சிலர், தற்போது சிகிச்சை பெற்றுவரும் நிலையில், அவர்கள் வீடு திரும்பியதும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வுள்ளன.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிப்பில் மருதனார்மடம் சந்தி, ஓட்டோ தரிப்பிடத்திலுள்ள சாரதிகளிடம் கடந்த 9 ஆம் திகதி (புதன்கிழமை) மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர்.பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் பரிசோதனையின் முடிவில் மருதனார்மடம் பொதுச்சந்தை வியாபாரியாகவும் ஓட்டோ சாரதியாகவும் உள்ள 38 வயதுடைய குடும்பத் தலைவர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கடந்த 11ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) கண்டறியப்பட்டது.

அவர் தம்புள்ளை சந்தைக்கும் சென்று வருபவர் என்று தெரிவிக்கப்பட்டதால், சுகாதார அதிகாரிகள் முதலில் அது தொற்று ஏற்படுவதற்கு காரணமாக இருந்திருக்கலாம் என்று ஆராய்ந்தனர்.

எனினும் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட தொடர் விசாரணையில் கொழும்பிலிருந்து வருகை தரும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மருதனார்மடத்தில் இருந்து ஓட்டோவில்; யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளுக்கு பயணித்தனர் எனத் தெரிய வந்தது.

அதனை உறுதி செய்யும் வகையில் தெல்லிப்பழை கட்டுவனில் கடந்த வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்ட 36 வயதுடைய குடும்பப் பெண், 21 கிராம் ஹெரோயினுடன் காங்கேசன்துறை மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவர் தனது வாக்குமூலத்தில் கொழும்பு ஆமர் வீதியில் வசிக்கும் ஓட்டோச் சாரதி ஒருவர், யாழ்ப்பாணத்துக்கு ஹெரோயினை பஸ்ஸில் எடுத்து வருகிறவர் எனவும் அவர் மருதனார்மடம் சந்தியில் இறங்கி கட்டுவனில் உள்ள தனது வீட்டுக்கு வருபவர் எனவும் தெரிவித்திருந்தார். மருதனார்மடத்தில் இறங்கும் அவர் ஓட் டோவிலேயே கட்டுவனுக்குப் பயணித்துள்ளார் என்பது பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

எனினும் பொலிஸார் தொடர்ச்சியான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு, மருதனார்மடம் கொரோனா வைரஸ் தொற்று கொத்தணியுடன் தொடர்புடைய சிலர், கொவிட் – 19 நோய்க்கான சிகிச்சைக்காக கோப்பாய் தேசிய கல்வியியற்கல்லூரி சிகிச்சை நிலையத்தில் தங்க வைத்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

அதனால் அவர்கள் வீடு திரும்பியதும் முறையான விசாரணைகளை முன்னெடுக்க பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

# இலங்கை முஸ்லிம்கள் தாம் பிறந்த மண்ணுக்கே உரமாகுதல் வேண்டும்!

**எம். எம். மஹ்தி வலியுறுத்து**

இலங்கையில் பிறந்து, வளர்ந்த ஒருவரின் உடல் இந்த நாட்டுக்கே உரமாக வேண்டும் என கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம். எம். மஹ்தி தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை வெளியிட்டுள்ள தனது ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

மரணித்த உடலுக்கான இறுதிக் கடமைகளை அதன் உறவினர்கள் விரும்புகின்றவாறே நிறைவேற்றுவது அவர்களது அடிப்படை உரிமை ஆகும். ஆனால் தற்போது கொரோனாத் தொற்று காரணமாக மரணிக்கின்ற உடலங்களை எரித்தே ஆக வேண்டும் என்று இலங்கை அரசு தீர்மானித்திருக்கிறது.

இந்நிலையில் மரணிக்கின்ற தங்களது உறவுகளின் உடலங்களை எரிக்காமல் தமது சமய கலாசார முறைப்படி புதைப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து சிறுபான்மை மக்கள் போராட்டங்களை ஆரம்பித்து இருக்கின்றார்கள்.

இலங்கை அரசின் நிலைப்பாட்டை அறிந்து கொண்ட மாலைதீவு முஸ்லிம்களின் கொரோனா ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாக மனிதாபிமான அடிப்படையிலும் மத நம்பிக்கையின் அடிப்படையிலும் விருப்பம் தெரிவித்துள்ளதான செய்திகளை ஊடகங்களில் காணக் கிடைத்தது. அதே நேரம் தங்களது உடலங் களை எரிப்பதை விரும்பாத கத்தோலிக்க மக்களினது போராட்டத்துக்கு என்ன பதிலை சொல்லப் போகின்றார்கள் என்ற கேள்வியும் எழுகிறது.

இந்த முயற்சி ஆரோக்கியமான ஒரு முடிவல்ல. இது, எதிர்காலத்தில் இந்நாட்டு முஸ்லிம்களின் இருப்பைக் கூட கேள்விக்குள்ளாக்கலாம் என்ற சந்தேகத்தையும் எழுப்புகின்றது.

ஆகவே இலங்கையில் பிறந்து, வளர்ந்து, மரணிக்கின்ற ஒருவர் இலங்கை மண்ணுக்கே உரமாக வேண்டும். வேறோரு நாட்டுக்கு உரமாக முடியாது. இவ்வாறான ஒரு தீர்மானத்தை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளவும் முடியாது. இது வன்மையாகக் கண்டிக்கப்படக்கூடிய அடிப்படை உரிமை மீறலாகும். இவ்வாறான முயற்சிகளை உடனடியாக எல்லோரும் கைவிடவும் வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.





லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

தொ.பே. 077 197 1667
077 3164 796

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1992.06.06 மதம் - இந்து
ஜாதி - P நட்சத்திரம் - மகம் (1)
கி.பா - 40 செவ் - 07 இல்
தகைமை - கல்வியியல் கல்லூரி தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1988.10.10 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அத்தம்
கி.பா - 116 செவ் - 8 இல்
தகைமை - B.A தொழில் - கிராம சேவகர்
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள்.

பிறந்த திகதி -1991.9.27 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பரணி (சைவம்)
கி.பா - 11 செவ்/சூரி - 5 இல்
தகைமை - B.S.C. Software Engineer
தொழில் - company colombo உரிமையாளர்.
எதிர்பார்ப்பு - Engineer பட்டதாரி மணமகள் கொழும்பு விருப்பம்.

பிறந்த திகதி - 1987.10.16 மதம் - இந்து
ஜாதி - P பகுதி நட்சத்திரம் - பூசம்
கி.பா - 13 செவ்/சூரி - 12 இல்
தகைமை - BA + PG.DE தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி ஆசிரியர் + அரச சேவை.

பிறந்த திகதி - 1985.03.27 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 15 சூரி - 11 இல்
தகைமை -M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor or பட்டதாரி மணமகள்.

பிறந்த திகதி - 1984.01.29 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மூலம்
கி.பா - 08 சூரி - 03 இல்
தகைமை -M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகள்.

பிறந்த திகதி - 1978.02.03 மதம் - இந்து
ஜாதி - குருகுலம் நட்சத்திரம் - கேட்டை 2
கி.பா - 41 செவ் - 2 இல்
தகைமை - T.O தொழில் - T.O அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை தனியார் மணமகள்.

பிறந்த திகதி - 1990.03.27 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தரட்டாதி
கி.பா - 25 செவ் - 02 இல்
தகைமை - AL
தொழில் - U.K PR இலங்கை வருவார்.
எதிர்பார்ப்பு - AL படித்த மணமகன் UK+ இலங்கை மணமகள்.

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1991.03.05 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - சுவாதி
கி.பா - 33 செவ் - 07 இல்
தகைமை - Bissnessman Management
தொழில் - Bank Officer
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகன்.

பிறந்த திகதி - 1990.08.30 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மூலம்
கி.பா - 30 செவ் - 01 இல்
தகைமை - Bsc + msc
தொழில் - ஆராய்ச்சியாளர் அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை உயர் பதவி மணமகன்.

பிறந்த திகதி - 1991.11.23 மதம் - இந்து
ஜாதி - செட்டி வேளாளர் பெண் நட்சத்திரம் - ரோகினி 4
கி.பா - 21 செவ்/சூரி -10இல்
தகைமை - IT Software Engineer தொழில் - Company
எதிர்பார்ப்பு - அரச சேவை தனியார் மணமகன்.

பிறந்த திகதி - 1997.08.04 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம் (1)
கி.பா - 38 செவ்/சூரி - 07 இல்
தகைமை - G.C.E AL I.T தொழில் - Pharmacist
எதிர்பார்ப்பு - அரச சேவை, வெளிநாடு மணமகன்.

பிறந்த திகதி - 1992.11.01 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சதயம்
கி.பா - 12 செவ்/சூரி - 02 இல்
தகைமை - கல்வியியல் கல்லூரி தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1986.02.17 மதம் - இந்து
ஜாதி - P பெண் (பகுதி) நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 22 செவ் - 06 இல்
தகைமை - B.com +HNDA தொழில் - D.O
எதிர்பார்ப்பு - அரச சேவை or தனியார் மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1990.10.10 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மிருகசீரிடம் (4)
கி.பா - 27 செவ் - 08 இல்
தகைமை - B.A. (S.L.A.S)
தொழில் - Company அரச சேவை உயர் பதவி
எதிர்பார்ப்பு - அரச சேவை உயர் பதவி மணமகன்.

பிறந்த திகதி - 1994.09.18 மதம் - இந்து
ஜாதி - P பெண் (பகுதி) நட்சத்திரம் - சதயம்
கி.பா - 29 செவ் - 08 இல்
தகைமை - B.B.M தொழில் - M.A அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி
021 222 3000


# நூதனசாலைகள் அனைத்தும் இன்று தொடக்கம் திறக்கப்படும்

மத்திய கலாசார நிதியத்தின் கீழ் உள்ள அனைத்து நூதனசாலைகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் திறக்கப்படவுள்ளன எனவும் சுற்றுலாத்துறை சேவையை முன்னெடுக்க இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் மத்திய கலாசார நிதியம் அறிக்கை வெளியிட்டுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக மத்திய கலாசார நிதியத்தின் கீழ் உள்ள நூதனசாலைகள் மூடப்பட்டன.

கொரோனா வைரஸ் தாக்கம் தற்போது ஒப்பீட்டளவில் கட்டுப்பாட்டுக்குள் காணப்படுகிறது. சர்வதேச விமான நிலையம் எதிர்வரும் 26 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது. இவ்வாறான நிலையில் உள்ளூர் மற்றும் வெளி நாட்டு சுற்றுலா பயணிகளுக்காக ஞாயிறு முதல் நூதனசாலைகள் திறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய பொலன்னறுவை, சிகிரியா, கதிர் காமம், காலி, கண்டி மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள நூதனசாலைகள் திறக்கப்படவுள்ளன.

# வர்த்தக நிலையங்கள் யாழில் மூடப்பட்டன

மருதனார்மடத்தில் கொத்தணியுடன் தொடர்புடைய 30 பேர் யாழ்ப்பாண மாநகர சுகாதார பணிமனையினரின் ஆளுகைக்குப்பட்டபகுதிகளில் குடும்பத்தோடு சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என சுகாதார தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் யாழில் அண்மையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் நடமாடியதன் காரணமாக நான்கு கடைகள் மற்றும் ஒரு சிற்றுண்டி உணவகம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு கடமையாற்றியவர்கள் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக் குள்ளாக்கப் பட்டுள்ளார்கள். அவர்களுக்கு எதிர்வரும் 26ஆம் திகதிய ளவில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் யாழ் மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.




# நாய், பூனைகளைப் போலவே கங்காருவும் மனிதர்களுடன் பழகும் வீட்டு விலங்குதான்



வீட்டு விலங்குகளைப்போல் கங்காருகளும் மனிதர்களுடன் சைகை மொழி மூலம் உதவி கேட்கும் திறனைப் பெற்றிருப்பதை கண்டுபிடித்துள்ளனர் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

வீட்டு விலங்குகளான நாய், பூனைகளைப் போன்று மனிதர்களுடன் பழகுவதை கங்காரு இனமும் கற்றுக்கொள்வதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் தேசிய விலங்கான கங்காருவின் குணாதிசயங்களையும், அவை மனிதர்களுடன் பழகுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கிறதா என்பதையும் கண்டறிவதற்கான ஆராய்ச்சியை அயர்லாந்தைச் சேர்ந்த விலங்கியல் ஆராய்ச்சியாளர் அலன் மெக்எலிகாட் (Alan McElligott) தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர். ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் நகருக்கு வெளியே அமைந்துள்ள மௌன்ட் மேசிடன் (Mount Macedon) பகுதியில் 11 கங்காருகளைக் கொண்டு ஆய்வில் ஈடுபட்டனர்.

11 கங்காருக்களும் வளர்க்கப்படவில்லை, அந்த பகுதியிலிருந்த அவற்றை ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் அடைத்து தங்களின் ஆய்வை ஆய்வாளர்கள் மேற்கொண்டனர். இதன் முடிவுகளை அண்மையில் வெளியிட்ட அவர்கள், அதில் மனிதர்களின் உரையாடல்களையும், கட்டளைகளையும் கங்காருகள் புரிந்து கொள்கின்றன எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும், வீட்டில் வளரும் நாய், பூனை, ஆடு, மாடு உள்ளிட்ட விலங்குகள் தங்களுக்கு தேவையானதை சைகை மூலமோ அல்லது பார்வை மூலமோ உணர்த்தி பெற்றுக்கொள்வதுபோல் கங்காரு இனமும் செய்வதாகத் தெரிவித்துள்ளனர்.

இதற்கு சான்றாக, 11 கங்காருகள் முன்பு உணவு அடைக்கப்பட்ட பெட்டியைக் கொண்டு வைத்ததாகவும், 10 கங்காருகள் அந்த பெட்டியைத் திறந்து வைக்க வேண்டும் என்பதுபோல் ஆய்வாளர்களை பார்த்ததாகவும் அவர்கள் கூறியுள்ளனர். தாங்கள்

## ஆய்வில் வெளியான புதிய தகவல்!

அமைதியாக இருந்தபோதும், உணவுப் பெட்டியையும், தங்களையும் உற்று பார்த்துக்கொண்டே இருந்ததாக தெரிவித்துள்ள ஆய்வாளர்கள், ஒரு கட்டத்தில் அந்தப் பெட்டிகளை திறக்குமாறு சைகை மூலமாக தெரிவித்தன எனவும் கூறியுள்ளனர். கங்காருவின் இந்த சைகை மொழி தங்களுக்கு வியப்பை ஏற்படுத்தியதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

செல்லப் பிராணியை தினமும் வாக்கிங் கூட்டிப் போவதுதான் உங்களின் முதல் வேலையா..? அப்போ இந்த செய்தி உங்களுக்குத்தான்..! பொதுவாக வீட்டில் வளர்க்கப்படும் வளர்ப்பு விலங்குகள் மட்டுமே இத்தகைய சைகை மொழிகளைக் காட்டும் நிலையில், காட்டில் வளரும் கங்காரு சைகை மொழி காட்டியது புதுமையாக இருந்ததாக தெரிவித்தனர்.

இதன் மூலம் வீட்டு விலங்குகளைப்போல் கங்காருகளும் மனிதர்களுடன் சைகை மொழி மூலம் உதவி கேட்கும் திறனைப் பெற்றிருப்பதைக் கண்டுபிடித்துள்ளதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். 'கங்காரு மனிதர்களுடன் வாழ்வதற்கு ஏற்ற விலங்குதான் என்பதற்கு சரியான அறிகுறி இந்த மொழிச் சைகை' என அயர்லாந்து ஆராய்ச்சியாளர் அலன் மெக்எலிகாட் தெரிவித்துள்ளார்.



பொதுவாக காட்டு விலங்குகளிடம் இதுபோன்ற சைகைகளை எதிர்பார்க்க முடியாது என்பதால், இது எங்களுக்கு புதுமையாக இருக்கிறது என்று அவர் கூறினார்.

நாய், பூனை, குதிரை உள்ளிட்ட வீட்டு விலங்குகள் எவ்வாறு மனிதர்களுடன் சைகை மொழியில் பேசுகிறது என்பதையும் ஆய்வறிக்கையில் விளக்கியுள்ள ஆராய்ச்சியாளர்கள், அவற்றுடன் கங்காரு எப்படி ஒத்துப்போகிறது என்பதையும் கூறியுள்ளனர்.

சரியான கற்றல் சூழல் இருக்கும்போது, அங்கு இருக்கும் குணாதிசயங்களை எளிதாக கற்றுக் கொள்ள முடியும், காட்டு விலங்கான கங்காருவும் இதற்கு பொருந்தி இருப்பதாக ஆய்வில் பங்கேற்ற துணை ஆய்வாளர் அலெக்ஸாண்டிரியா கிரீன் கூறியுள்ளார்.

# ஜெனிவாவா? சர்வதேச .....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், சுமந்திரனின் ஆவணம் தொடர்பாக மற்றைய இரு தலைமைகளும் இதுவரை எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. அவர்கள் என்ன சொல்லப் போகிறார்களென்பதை புலம்பெயர் தமிழர் மட்டுமன்றி சர்வதேச சமூகமும் ராஜதந்திர வட்டாரங்களும் எதிர்பார்த்துள்ளன. மூன்று தரப்புகளும் சமதளத்தில், ஒரே நேர்க்கோட்டில் சுமந்திரனின் ஆவணத்துக்கு ஆதரவளிக்கக்கூடிய சூழ்நிலை காணப்படவில்லையென்பது தெரிகிறது.

ஆரம்பத்திலிருந்தே ஜெனிவா மனித உரிமைத் தீர்மானங்களில் நம்பிக்கையற்றவராக கஜேந்திரகுமார் தம்மை அடையாளப்படுத்தி வந்துள்ளார். ஜெனிவா என்பது வெறுமனே தீர்மானங்களை நிறைவேற்றுமே தவிர அதனை நடைமுறைப்படுத்தும் களம் அல்ல என்பதால், இதனை விசாரணைக்குட்படுத்த வேண்டிய இடத்துக்கு கொண்டு செல்ல வேண்டுமென்பதே இவரது ஆரம்பம் முதலான நிலைப்பாடு.

ஏறத்தாழ இதேபோன்ற நிலைப்பாடுதான் விக்னேஸ்வரனுடையதும். தம்மோடு நெருக்கமான துறைசார் நிபுணர்களுடன் இதுபற்றி இவர் உரையாடி வருகிறார். சர்வதேச நீதிமன்றத்துக்கு (International Court of Justice) இலங்கை விவகாரத்தை எடுத்துச் செல்ல வேண்டுமென்பதில் இவருக்கு அக்கறை அதிகம்.

இவ்வாறு பார்க்கையில் ஜெனிவாவுக்குள் தொடர்ந்து நீச்சலடித்து வருடங்களை இழுத்தடித்து அதற்குள் மூழ்கிவிடாது வேறு பாதையில் பயணிக்க வேண்டுமென இவர்கள் இருவரும் விரும்புவதால் சுமந்திரனின் ஆவணம் கருத்தொருமித்ததாக ஏற்கப்படும் சாத்தியம் காணப்படவில்லை.

இவ்வேளையில் ஜெனிவாவின் முன்னைய தீர்மானம் தொடர்பாக ஓரிரு வருடங்களுக்கு முன்னர் வழங்கிய ஆங்கில செவ்வியின் ஒலிப்பதிவு கடந்த சில நாள்களாக ஊடகங்களில் பரவி வருகிறது. 'நாங்கள் இந்த நாட்டின் ஒரு பகுதியினர். அதனால் நாங்கள் சிறிலங்காவுக்கு எதிராக எதனையும் செய்ய மாட்டோம் (We are part of the Country. We Don't do anything against Sri Lanka) என்று சுமந்திரன் இதில் தெரிவித்துள்ளார்.

இது கூறப்பட்ட காலம் சுமந்திரனும் அவரது கூட்டமைப்பும் நல்லாட்சியுடன் கூடியிருந்த காலம் என்பதால், அவர் அப்போது கூறியதை இப்போதைய நிலைப்பாடென எடுத்துக் கொள்ளக்கூடாதென்பது சிலருடைய வாதமாக அமையலாம். அதில் நியாயம் உண்டு.

இப்போது எழுகின்ற கேள்வி சுமந்திரனும் அவரது கூட்டமைப்பும் இன்று ஜெனிவா நிலைப்பாட்டில் எவ்வாறு உள்ளனர்? மூன்று தமிழ்த் தேசிய கட்சிகளில் இரண்டு ஜெனிவாவில் தொங்கியிருப்பதில் பிரயோசனமில்லை, அல்லது அர்த்தமில்லையென்று கூறினால் அவர்களுடன் இணைந்து சர்வதேச விசாரணைக்கு சுமந்திரன் உடன்படுவாரா? அல்லது தன்வழி தனி வழி என்று தொடர்ந்து அவ்வழி செல்வாரா?

மீண்டும் சிறிலங்காவுக்கு எதிராக எதனையும் செய்ய மாட்டோம் என்று கூறிக்கொண்டு ஜெனிவாவுக்குள்ளேயே தன்னுடைய செயற்பாடுகளை முடக்கிக் கொள்வாரா? தமிழ் மக்கள் கண்களை அகலத்திறந்து நடப்பவைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**நன்றி: 'பதிவு' இணையம்**



காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பில் தொற்று 15,624 ஆக உயர்வு!

கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையால் கடந்த ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதியில் இருந்து நேற்று வரை கொழும்பு மாவட்டத்தில் 15 ஆயிரத்து 624 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் நேற்று மாத்திரம் 259 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தாக்கத்தால் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவானவர்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கொழும்பில் சில பகுதிகள் தொடர்ந்தும் முடக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## பொய்ப்பித்துப் போகுமா அரசின் உறுதிமொழி?

# மாகாண சபைகள் முறைமைக்கு எதிராக கோட்டாவின் சகா மீண்டும் போர்க்கொடி!



### இந்தியா மீதும் கடும் தாக்கு

மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதமளவில் நடத்தப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல உறுதியளித்துள்ள நிலையில், மாகாண சபைகள் முறைமைக்கு எதிராக

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மீண்டும் போர்க் கொடிதூக்கியுள்ளார்.

மாகாண சபைகள் முறைமையால் நாட்டில் உயிர்த்தியாகம் செய்த, அங்கவீனமடைந்த படையினருக்கு அவமரியாதை ஏற்பட்டுள்ளது எனவும், 9 மாகாணங்களில் 9 விதமான சட்டங்களை உருவாக்க முடியுமாயின், ஒரே நாடு ஒரே கொள்கை பொய்யாகிவிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அம்பாறை மாவட்ட சிவில் பாதுகாப்பு அதிகாரிகளை நேற்று சந்தித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய - இலங்கை ஒப்பந்தம் நடைமுறையில் இல்லை. ஒரே நாடு ஒரே கொள்கை என்பதே ஜனாதிபதியின் கொள்கை என்பதால், மாகாண சபை முறைமையை எதிர்க்கின்றேன்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி, தமிழீழ விடுதலைப்புலிகளை நிராயுதபாணிகளாக்குவது, மீண்டும் போர் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது, வடக்கில் வாழ்ந்த மக்களை மீள்குடியேற்றுவது ஆகிய மூன்று நிபந்தனைகளை இந்தியாவால் நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது.

இந்த உடன்படிக்கை நடைமுறையில் இல்லாத நிலையில் மாகாண சபை முறைமைக்கு இணங்கி மாகாண சபைகள் மூலமோ அரசமைப்பின் மூலமோ நாட்டை எவருக்கும் வழங்கப்போவதில்லை.

மாகாண சபைகள் முறைமையால் நாட்டில் உயிர்த் தியாகம் செய்த, அங்கவீனமடைந்த படையினர்களுக்கு அவமரியாதை ஏற்பட்டுள்ளது - என்றார்.

# இந்தியத் தூதுவருடன் கூட்டமைப்பு சந்திப்பு

கொழும்பு, டிசெ.19

இலங்கைக்கான இந்தியத் தூது வர் கோபால் பாக்லேயை இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் இல்லத்தில் இந்தப் பேச்சு இடம்பெற்றது. சந்திப்பில் கூட்டமைப்பின் உயர்மட்டத் தலைவர்கள் மட்டுமே பங்கேற்றனர். அதேநேரம், இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட வற்றைப் பகிரங்கப்படுத்துவதில்லை என்றும் இரு தரப்பினரும் தீர்மானித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் விவகாரம், ஜெனிவா விவகாரம், பொருளாதாரம், சமகால அரசியல் விடயங்கள் குறித்து முக்கியமாக இதன் போது பேசப்பட்டன என்றும் தெரியவந்தன.

அத்துடன் வடக்கு, கிழக்கில் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய திட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பிலும் கூட்டமைப்பு வலியுறுத்தியது.

இதேவேளை, பலாலி விமான நிலையத்தை மீளவும் இயங்கச் செய்ய இந்தியா அழுத்தம் கொடுக்கும் என்றும், காங் கேசன்துறை துறைமுகத்தை இயக்கவும் நடவடிக்கை எடுக்கும் என்றும் தூதுவர் சார்பில் தெரிவிக்கப்பட்டது எனவும் கூறப்பட்டது.

# கொரோனாவிலிருந்து 27,552 பேர் மீண்டனர்!

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 491 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 552 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 8 ஆயிரத்து 332 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் 165 பேர் உயிரிழந்துள்ளனர்.

## களுத்துறை மாவட்டத்தில்

# கொரோனா வைரஸின் பிடிக்குள் 55 கர்ப்பிணிப் பெண்கள் இலக்கு!

கொரோனா வைரஸ் தாக்கத்தின் இரண்டாவது அலை மூலம் களுத்துறை மாவட்டத்தில் இதுவரை 55 கர்ப்பிணிப் பெண்களுக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

இந்தத் தகவலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் களுத்துறை மாவட்டத்தில் வேமாகப் பரவி வருவதால் அதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அங்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தும் மேற்படி சங்கம், மக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

அவ்வாறு இல்லாவிட்டால் மாவட்டத்துக்குள்ளேயே உப கொத்தணிகள் உருவாகக் கூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, களுத்துறை மாவட்டத்தில் இதுவரை 2 ஆயிரத்து 448 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நேற்று மாத்திரம் 164 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# கொரோனாத் தொற்று ஏற்படாதவாறு நத்தார் பண்டிகையைக் கொண்டாடுக

## யாழ். மாவட்ட மக்களிடம் பொலிஸ் வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படாதவாறு நத்தார் பண்டிகையைக் கொண்டாட வேண்டும்.

-இவ்வாறு யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் சேனாரத்ன தெரிவித் தார்

யாழ். மாவட்ட கொரோனா நிலைமைகள் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ் மாவட்டத்தில் தற்போது ஒவ்வொரு நாளும் கொரோனாத் தொற்றாளர்கள் இனங் காணப்படுகின்றார்கள். எனவே, இனிவரும் காலங்களில் பொதுமக்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டிய காலமாகவுள்ளது.

அதிலும் குறிப்பாக எதிர்வரும் நாள்களில் நத்தார் மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்கள் வருகின்றன. பொதுமக்கள் நாட்டில் உள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மற்றும் மதத் தலைவர்களின் வழிகாட்டலைப் பின்பற்றி தங்களுடைய கொண்டாட்டங்களைச் செயற்படுத்த வேண்டும்.

# முதியோர் இல்லத்தில் ஒருவர் சாவு 45 பேருக்குக் கொரோனா உறுதி

கொழும்பு, டிசெ. 20

மோதர பகுதியிலுள்ள முதியோர் இல்லத்தில் 45 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அண்மையில் இந்த முதியோர் இல்லத்தில் ஒருவர் உயிரிழந்ததையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் கொரோனாத் தொற்றுள்ளமை இனங் காணப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் 98 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும், அவர்களில் 45 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.



# கப்பலின் பாகமே கரை ஒதுங்கியது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடற்கரைப் பிரதேசத்தில் இன்று காலை கரை ஒதுங்கியது கப்பலின் அலை வரிசை கோபுரமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. காங்கேசன்துறை பகுதியில் உள்ள சுனாமிக் கோபுரம் இது என ஆரம்பத்தில் கருதப்பட்டபோதும் காங்கேசன்துறைப் பகுதியில் சுனாமி கோபுரமே இல்லை என்பதனால் கற்படையினருக்கு இது குறித்துத் தகவல் வழங்கப்பட்டது.

அந்த இடத்திற்குச் சென்ற கடற்படையி னர் அது தொடர்பில் ஆராய்ந்து வருவதோடு நடுக் கடலில் பயணித்த கப்பல் புரவி புயல் காலத்தில் அகப்பட்டோ அல்லது வேறு விபத்துக்களின்போதே கடலில் வீழ்ந்த பாகமாக இருக்கலாம் என கருதப் படுகின்றது.

இருந்தபோதும் குறித்த பொருள் இதுவரை சரியாக இனம் காணப்படாத நிலையில் அப்பகுதியிலேயே காணப்படுகின்றது.

# காளியம்மன் பற்றிப் பேசுவதை நிறுத்தவேண்டும் 'பாணி தம்மிக'

## மனோ எம்.பி. வலியுறுத்து



கொறொனாவுக்குப் 'பாணி மருந்து' கண்டு பிடித்துள்ளார் என்று அரசின் சில அமைச்சர்களால் மகிமைப்படுத்தப்பட்டு ஓடித்திரியும் 'பாணி தம்மிக' என்ற நாட்டு வைத்தியரை சில தேரர்கள், 'தேசிய மோசடிக்காரன்' என்கிறார்கள். சிலர், 'தேசிய வீரன்' என்கிறார்கள். எனக்கு இதில் அக்கறை இல்லை. ஆனால், இவர் இந்துக் கடவுளான காளியம்மன் பற்றிப் பேசுவதை உடன் நிறுத்த வேண்டும்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

நான் இந்த நாட்டு வைத்தியரின் பாணி மருந்தை இதுவரை குடிக்க வில்லை. இனிமேல் குடிக்கும் எண்ணமும் இல்லை.

எங்கள் வீட்டில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று இதுவரை வராமைக்குக் காரணம், எங்க வீட்டு 'சித்த வைத்திய' பானங்கள்தான். இவை நாம் எப்போதும் பாரம்பரியமாக எங்கள் பூட்டன், பூட்டி காலத்திலிருந்து பின்பற்றி வரும் இயற்கை மருந்து பானங்கள்.

இங்கே எனது பிரச்சினை என்னவென்றால், இந்தப் 'பாணி தம்மிக' என்ற நாட்டு வைத்தியர், தனக்குத் துணையாக 'காளியம்மனை' அழைத்துள்ளதாகும். இவர் தனக்குக் காளியம்மன் அருள் பாலித்திருக்கின்றார் எனக்கூற, இவரை எதிர்ப்போர் காளியம்மனையும் சேர்த்து விமர்சிக்கின்றார்கள். இது நிறுத்தப்பட வேண்டும். காளியம்மன், பார்வதி தேவியின் ஓர் அவதாரம். பார்வதி, இந்துக்களின் மூத்த தாய்க் கடவுள். - என்றார்.

# தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கோருகிறார் கூட்டமைப்பு உறுப்பினர் சாணக்கியன்

எமது நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருளான தேயிலை உற்பத்தியில் மிக முக்கிய பங்கு வகிக்கும் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவுள்ள தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும் என கடந்த வெள்ளிக்கிழமை மலையகத்துக்கு விஜயம் செய்திருந்த நிலையில், அதுதொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அரசாங்கமானது, மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்குவதாக உத்தரவாதம் அளித்துள்ளது. ஆனால் தொழிலாளர்களின் தற்போதைய கூற்றுப்படி மாதத்துக்கு 10 ஆயிரம் தொடக்கம் 12 ஆயிரம் கிடைப்பதாக சொல்கின்றனர்.

அதுவும் 26 வேலைநாள்களுக்குரிய தொகையாக இதனை வழங்குகின்றனர். இதனடிப்படையில் ஒருவரின் நாள் வருமானமானது 500 ரூபாவுக்கு குறைவாகவே காணப்படுகின்றது.

அதிலும் சில கழிவுகளை கழித்துவிட்டுத்தான் சம்பளத்தை வழங்குகின்றனர்.



இவ்வாறான பிரச்சினைகளை அரசாங்கம் முக்கியமாககவனித்து, அவர்களுக்குரிய சரியான சம்பளத்தை வழங்க உறுதி அளித்தது போன்று மிக விரைவில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அறிவிப்பு!



உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை விரைவில் நிவர்த்தி செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சுக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இந்தக் குறைபாடுகள் காரணமாக வெற்றிடமாகியுள்ள உறுப்பினர்களுக்கான நியமனங்களை வழங்குவதில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டத்தின் அடிப்படையில், தற்போது காணப்படும் நடைமுறைகளுக்கமைவாக சுயாதீன குழுக்கள் உள்ளிட்டவற்றில் எவரேனும் ஒருவர் நீக்கப்பட்டால் அல்லது இராஜினாமா செய்தால் அந்த பதவி வெற்றிடத்திற்கு ஒருவரை நியமிப்பதில் சிக்கல் காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

# சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டம் முன்னெடுப்பு

## அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே யோசனை

கொழும்பு, டிசெ.20

கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் நாட்டில் சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உகந்த சுற்றுச் சூழலை முன்னெடுப்பதற்காக விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்னி பெர்னாண்டோபுள்ளே உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொரோனா தொற்றால் பாதிக் கப்பட்டுள்ள சுற்றுலாத்துறையை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளதாகவும், அதன் மூலமே வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப முடியும் எனவும், எனவே இந்த சந்தர்ப்பத்தில் சுகாதாரதுறையினர் மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டியுள்ளது எனவும் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.






காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கைக்கு இனியும் காலக்கெடு எதற்காக?

## தமிழர்களையும் முஸ்லிம்களையும் உண்டு, இல்லை என்று பண்ணவா?

"எல்லாம் தெரிந்து கொண்டும் மேலும் காலக்கெடு இலங்கைக்கு வழங்க நீங்கள் முன்வருவது எனக்கு மலைப்பை ஏற்படுத்துகின்றது."

ஜெனீவாவில வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடர் தொடர்பில் சர்வதேச சமூகத்தைத் தமிழ்த் தேசிய் கட்சிகள் ஒன்றுபட்டு கையாள்வது சம்பந்தமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. முன்வைத்த யோசனைத் திட்டத்தை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரந் எம்.பி. அடியோடு நிராகரித்து விட்டார். இதையொட்டி அவர் சுமந்திரனுக்கு எழுதிய கடிதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு இங்கு பிரசுரமாகின்றது.

**அன்புள்ள சுமந்திரன் அறிவது,**

எனது பார்வைக்காக என்னிடம் கையளித்த ஆவணத்திற்கு நன்றி. அது ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அங்கத்தவர்களுக்குமான கடிதத்தின் முதல் வரைவாகும்.

அதன் முதல் ஐந்து பக்கங்களிலும் நீங்கள் குறிப்பிட்டிருப்பவை அனைத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினர் முற்றிலும் அறிந்த விடயங்களே. அம்முதல் வரைவின் முன்னுரையில் நீங்கள் இருசாராரும் இயற்றிய மனித உரிமை மீறல்கள் பற்றிக் கூறியுள்ளீர்கள். நாங்கள் இவ்விடயத்தில் புறநிலை கூர் நோக்கர்களாக இருக்க வேண்டுமா அல்லது சுயநிலை முறைப்பாட்டாளர்களாக மாறவேண்டுமா என்பதில் எனக்கு மயக்கம் இருக்கின்றது.

எது எவ்வாறு இருப்பினும் உங்களால் பரிந்துரைக்கப்பட்ட ஒரேயொரு திடமான செயற்பாடானது இது வரை காலமும் தோல்வியைத் தழுவிய கூட்டத் தீர்மானம் போன்ற பிறிதொரு கூட்டத் தீர்மானத்தை மீண்டும் கொண்டு வருவதாகும். அதுவும் இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் தீர்மானமானமாக முன்னர் கொண்டுவந்த தீர்மானத்தில் இருந்து பின் வாங்கிய பின்னர் இவ்வாறான ஒரு கருத்தை வெளியிட்டுள்ளீர்கள்.

மீண்டும் காலக்கெடு விதிப்பதால் தற்போதைய நிலைமாறும்என்று எவ்வாறு முடிவுக்கு வந்துள்ளீர்கள்? உண்மையில் மேலும் காலக்கெடு அளித்தால் இன்றைய அரசாங்கமானது தமிழ், முஸ்லீம் சமூகங்களை இனி இல்லை என்று ஆக்கி விடுவார்கள் என்பதை உணர்ந்தீர்களா? அதுதான் தற்போது நடந்து கொண்டிருக்கின்றது. நீங்கள் உங்கள் முதல் வரை



வில் மிகச் சரியாகப் பின்வருமாறு கூறியுள்ளீர்கள்–

'தற்போது அவர்கள் குடியியல் பதவிகளுக்கு படையினரைத் தொடர்ந்து நியமித்து வருகின்றார்கள், தமிழ் மக்களின் காணிகளைக் கைப்பற்றி வருகின்றார்கள், தொல்லியல் மேலாண்மை என்ற பெயரில் கிழக்கிலங்கையில் காணிப் பங்கீட்டை நடத்தப் பௌத்த மதவாளர்களை நியமித்துள்ளார்கள், பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் போன்றோரைக் கண்காணிக்கவும் பயமுறுத்தவும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார்கள். மேலும் முஸ்லீம் சமூகத்தவரின் மதம் சார்ந்த நல்லடக்கச் சடங்குகளைத் தடை



போட்டுத் தடுத்து வருகின்றார்கள்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் மிக்க செல்வாக்குள்ள அங்கத்தவராக மாறி வரும் சீனாவானது 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதியன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அடங்கிய உலக ஸ்தாபனங்களில் இலங்கைக்கு முழு ஆதரவை வழங்கியும் பாதுகாப்பையும் வழங்கப் போவதாக வெளிப்படையாக அறிவித்துள்ளது'

இவ்வாறெல்லாம் நடக்கின்றன என்று கூறும் நீங்கள் எதற்காக இலங்கைக்கு மேலும் காலக்கெடு அளிக்க முன்வந்துள்ளீர்கள்?

நீங்களே உங்கள் பரிந்துரையொன்றில் காலக்கெடு அளிப்பதால் ஆவதொன்றில்லை என்ற கருத்தைப் பின்வருமாறு வெளியிட்டுள்ளீர்கள்.

'தாமதமாவது மேலும் நீடித்தால் சிங்கள பௌத்தர்களின் ஆதிக்கமானது மேலும் வலுவடைந்து இலங்கையின் சிறுபான்மையினர் அனைவரையும் கீழடக்கும் காலம் விரைவில் வரவிருக்கின்றது என்ற பாதிக்கப்பட்ட சமூகத்தினரின் சட்ட ரீதியான ஏக்கத்தைக் கவனத்தில் எடுக்க வேண்டும்' என்று கூறியுள்ளீர்கள்.

இவற்றை எல்லாம் தெரிந்து கொண்டும் மேலும் காலக்கெடு இலங்கைக்கு வழங்க நீங்கள் முன்வருவது எனக்கு மலைப்பை ஏற்படுத்துகின்றது.

உங்கள் பரிந்துரையானது இனவழிப்பு செய்த ஓர் அரசாங்கத்திற்கு முன்னர் அளித்த சலுகைகளை சர்வதேச நாடுகள் மீண்டும் அளிக்க வேண்டும் என்ற தொனிப்படவே அமைந்துள்ளது. அதில் மனவருத்தத்திற்குரியது என்னவென்றால் இந்தக் கோரிக்கையை பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் நீங்கள் முன்வைக்க முன்வந்துள்ளீர்கள். உங்கள் ஆவணத்தையும் பரிந்துரைகளையும் எவ்வாறு நாம் ஏற்க முடியும்? அவ்வாவணத்தை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்.

ஐங்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைத் தீர்மானத்தில் இருந்து தள்ளி நின்று அதற்கு எமது பகைமையை வெளிக்காட்டுவது சரியானதா என்ற கேள்வி உங்கள் மனதில் பூதாகாரமாக எழுந்துள்ளதை நான் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஆனால் ஐக்கிய நாடுகள் குற்றவியல் நீதிமன்றத்திற்கோ ஐக்கிய நாடுகள் நீதி மன்றத்திற்கோ இலங்கையைக் கொண்டு செல்லத் தமிழர் தரப்பார் இதுவரையில் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக் கூட்டுத் தீர்மானத்தை எதிர்க்க வேண்டும் என்றோ பேரவையைப் பகிகரியுங்கள் என்றோ நான் கூறவில்லை. நான் கூறுவது என்னவென்றால் பேரவையின் கூட்டுத்தீர்மானத்தை மேலும் பலப்படுத்த மேல் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதேயாகும்.

வடக்கு மாகாணசபையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்ந்த உள்ளூராட்சி மன்றங்கள் சிலவும் ஏற்கனவே இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்த வேண்டும் என்று ஒருமனதாக கூட்டுத்தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. அத்துடன் TELO, EPRLF, TULF, PLOTE மேலும் ஈழத்தமிழ்ச் சுயாட்சிக் கழகம் ஆகியவற்றுடன் எனது கட்சியும் சேர்ந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஆணையாளரிடம் சென்ற வருடமே மார்ச் மாதத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தக் கோரியுள்ளோம்.

ஆகவே இன்றைய நிலையில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினரிடமோ ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையினரிடமோ இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கோ ஐக்கிய நாடுகளினால் விசேடமாக நியமிக்கப்பட்ட சர்வதேச குற்றவியல் தீர்ப்பு ஆயத்திற்கோ பாரப்படுத்துமாறு கோரிக்கை விடுக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிடம் நாம் கேட்கலாம்.

## சுமந்திரனிடம் விக்னேஸ்வரன் கேள்வி

அதே நேரத்தில் சமாந்திரமாக நாம் இலங்கையை சர்வதேச நீதிமன்றின் முன் கூட்டிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். இது ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை முன்பான பொறிமுறைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நடைமுறைச் சாத்தியமான செயற்பாடாகும். இவற்றைச் செய்ய முடியுமா முடியாதா என்று மயங்கி நிற்கக் கூடாது. எமது மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் இவற்றைச் செய்வது எமது கடமையும் கடப்பாடாகவும் அமைகின்றது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிடம் கோரிக்கை விடும் அதே நேரம் ஐக்கிய நாடுகள் விசேட ஆய்வாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் அந்தப் பேரவையிடம் கோரிக்கை விடலாம். அதாவது இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள், காணி அபகரிப்பு போன்றவற்றைக் கண்காணிக்கவும் ஆராயவும் இவ்வாறான ஒரு ஆய்வாளரை நியமிக்கக் கோரலாம். அத்துடன் ஒரு சுயாதீனமான விசாரணைப் பொறிமுறையொன்றையும் தாபித்து பொறுப்புக் கூறலையும் போர்க்குற்ற செயல்ப்பாடுகளையும் ஆராயுமாறு கோரலாம்.

இவற்றை முழுமனதுடன் நடைமுறைப் படுத்த நீங்கள் முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன். இந்த அடிப்படையில் ஒரு கடிதத்தை வரைந்து தமிழ்க் கட்சிகள் எல்லோரும் சேர்ந்து கையெழுத்திட்டு அதனைப் பாரப்படுத்தலாம். நீங்களும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இவற்றைச் செய்ய ஒத்துழைப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

நாம் ஒன்று சேர்ந்து இந்த நடவடிக்கைகளை எடுப்போமாக. எனது கட்சி இதற்காக உங்களுக்கு முழு ஆதரவையும் நல்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

# பலாலி விமான நிலையம் 26 ஆம் திகதி திறப்பா?

ந.லோகதயாளன்




யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் உட்பட பல விமான நிலையங்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் திறக்கப்படும் என தற்போதைய அரசு கூறுவது உண்மையான தகவலாக கருதக் கூடிய சூழ்நிலை உள்ளதா எனக் கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தில் கூட்டமைப்பின் முயற்சிக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாக தோன்றிய - பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் - நாட்டில் ஏற்பட்ட கொரோனா அச்சம் காரணமாக சர்வதேச விமான நிலையங்களை இலங்கை அரசு மூடும்போது சேர்த்து மூடப்பட்டது.

அதன் பின்பு கட்டுநாயக்காவும் மத்தளவும் இயங்கிய போதும் யாழ்ப்பாணம் விமான நிலையப் பேச்சே எழவில்லை. தற்போது 26ஆம் திகதி அது மீளத் திறக்கப்படும் என அரசு கூறினாலும் அது ஏற்புடையதாக தெரியவில்லை.

ஏற்புடையதல்ல எனக் கூறுவதற்கு காரணம் உண்டு. யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் பணியாற்றிய பணியாளர்கள் நவம்பர் 17ஆம் திகதி மத்தள விமான நிலையத்திற்கு இடமாற்றப்பட்டனர். அவர்கள் இன்றுவரை இங்கே மீளக் கொண்டுவரப்படவில்லை. இதேநேரம் 26ஆம் திகதி மீளத் திறப்பது உண்மையானால் அந்த திகதியில் இருந்து விமானச் சிட்டைகள் வழங்குவதற்குரிய அனுமதியினை விமான போக்குவரத்து அதிகார சபை விமானச் சிட்டை விற்பனை முகவர்களிற்கு வழங்கியிருக்க வேண்டும். இவை எவையுமே இதுவரை இடம் பெறாதபோது டிசம்பர் மாதம் 26ஆம் திகதி திறப்பது என்ற தகவல் பொய்யானதாகவே இருக்க வேண்டும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இதேநேரம் இந்தியாவிற்கான விமானச் சிட்டை வழங்குவதானால் யாழில் உள்ள இந்தியத் தூதரகத்தினால் நுழைவு விசா வழங்கப்படவில்லை எனத்



தெரிவித்தனர்.

இது தொடர்பில் யாழில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளை தொடர்பு கொண்டு கேட்டால், 'தற்போது சுற்றுலா விசா தவிர்ந்த ஏனைய விசாக்கள் வழங்கப்படுகின்றன. அவர்கள் கொழும்பின் ஊடாக பயணிப்பதாக தெரிவிக்கின்றனர். இந்த விசாக்கள் தற்போது தூதரகம் ஊடாக வழங்கப்படுகின்றன. விமான நிலையம் திறந்து விசாவிற்காக அதிக மக்கள் வருகை தந்தால் மீண்டும் விசா அலுவலகம் திறக்கும்' என பதிலளிக்கின்றனர்.

இதேநேரம் இந்தியாவிற்கான பறப்பிற்கு இந்த நிலை எனில் பலாலி ஊடாக சாதாரணமாக இரத்மலானைக்கு இடம்பெற்ற விமான சேவைகூட தற்போது இடம்பெறுவது கிடையாது. அதனால் பல வெளிநாட்டு இராஜதந்திரிகள் உள்ளிட்ட பலர் கொழும்பில் இருந்து தரை மார்க்கமாக யாழ் வருவதற்கு ஏழு மணி நேரம் பயணிக்க வேண்டி உள்ளது. இந்தத் தாமதம் காரணமாக யாழிற்கான பயணத்தை அல்லது யாழில் இருந்து கொழும்பிற்கான பயணத்தை அவர்கள் இரத்துச் செய்கின்றனர்.

இவ்வாறான கால கட்டத்தில் கடந்த வாரம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தொடர்பு கொண்டு இது தொடர்பில் விவரம் தெரிவித்ததோடு 3 தினங்களிற்கு முன்னர் அமைச்சரை சந்தித்த இந்திய தூதரக அதிகாரிகளும் எடுத்துரைத்துள்ளனர். இதன்போது வழமை போன்று அமைச்சரும் உடனடியாக சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் உள்ளிட்ட இருவருடன் தொலைபேசி அழைப்பெடுத்து உரையாடியுள்ளார்.

அந்த உரையாடலின் பதிலாக 'யாழ்ப்பாணம் விமான நிலையத்தின் அபிவிருத்திக்காக இந்தியத் தூதரகம் வழங்கிய 30 கோடி ரூபா அபிவிருத்திக்கான அனுமதிக்கு அமைச்சரவைப் பத்திரம் தயார் செய்யப்படுகின்றது, எதிர் வரும் அமைச்சரவைக்கு இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படும், அதனையடுத்து

## நடக்காத விவகாரமே தோன்றுகின்றது

யாழ்ப்பாணம் விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்பட்டு வழமைக்குத் திரும்பும் எனக் கூறப்பட்டது. இது எந்தளவிற்கு சாத்தியப்பாடானது என்பதும் பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது.

உண்மையில் யாழ்ப்பாணம் விமான நிலையம் இழுத்துப் பூட்டப்பட்டு 8 மாத காலத்தில் கட்டுவன் மயிலிட்டி வீதியில் 400 மீற்றர் பாதைப் பிரச்சினைக்காக வெறும் 30 மீற்றர் தூரம் பாதுகாப்பு வேலியை பின் நகர்த்த மறுக்கும் அரசு இவை அனைத்தையும் மேற்கொண்டு எதிர்வரும் 26ஆம் திகதி விமான நிலையத்தைத் திறக்கும் என காத்திருக்கும் யாழ்ப்பாணம் மக்களுக்கும் இலவங்காய் பழுத்ததும் அதனை உணவாக்கலாம் என நம்பியிருந்த கிளிக்கும் நிலைமை ஒன்றுதான்.

இந்த விமான நிலைய அவலம் தொடர்பில் இவ்வாறு அவலம் ஏற்படவுள்ளது என்பதனை கடந்த ஓர் ஆண்டாக சுட்டிக்காட்டியபோதும் எவரும் கரிசனை கொள்ளவில்லை. அதிலும் குறிப்பாக அரசுடன் இணைந்துள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் வாக்களித்த மக்களிற்கு கிடைத்த ஒரு சொத்து அசட்டை செய்யப்படுவது தொடர்பில் பதிலளிக்க வேண்டிய பாரிய கடப்பாடு உண்டு.

---

## யாழ். பல்கலை மாணவன் இளங்குன்றன் மரணம் வழக்கு:

# சி.சி.ரி.வி. கமராவின் மேலதிக பதிவையும் சமர்ப்பிக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவு

மர்மமான முறையில் உயிரிழந்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மூன்றாம் வருட மருத்துவபீட மாணவன் சிதம்பரநாதன் இளங்குன்றன் மரணம் தொடர்பான வழக்கு விசாரணைக்காகப் பொலிஸாரால் சமர்பிக்கப்பட்ட சி.சி.ரி.வி. கமராவின் பதிவு குறித்து சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஸ் சந்தேகம் எழுப்பிய நிலையில் மேலதிக பதிவுகளையும் பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் பீட்டர் போல் கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 17ஆம் திகதி யாழ்ப்பாணம், கோண்டாவில், வன்னியசிங்கம் வீதியில் உள்ள விடுதி ஒன்றில் வசித்து வந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவனான சிதம்பரநாதன் இளங்குன்றன் தூக்கில் தொங்கிய நிலையில் கால்கள் இரண்டும் நிலத்தில் முழுந்தாளிட்ட வண்ணம் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

மரணத்தில் சந்தேகம் இருக்கின்றது என அவரின் குடும்பத்தினரால் தெரிவித்திருந்தனர். இந்தநிலையில், சந்தேகத்துக்கிடமான இம்மரணம் தொடர்பான விசாரணையைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் பாரப்படுத்துமாறு அவருடைய சகோதரன் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோருக்குக் கடிதம் அனுப்பி வைத்திருந்தார்.

இதையடுத்து கடந்த மாதம் 26ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது மரணமடைந்த பல்கலைக்கழக மாணவன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஸ் அப்பகுதியில் உள்ள சி.சி.ரி.வி. கமராக்களைப் பார்வையிடுவதற்கும், அவர் பயன்படுத்திய தொலைபேசியைப் பரிசீலனை செய்வதற்கும் மன்று உத்தரவு வழங்கவேண்டும் எனக் கோரிக்கையை முன்வைத்தார்.

இதை ஆராய்ந்த நீதிவான் அப்பகுதியில் உள்ள சி.சி.ரி.வி. கமராவின் பதிவுகளையும், குறித்த மாணவன் பயன்படுத்திய தொலைபேசிப் பதிவுகளையும் பெற்று நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டபோது கோப்பாய் பொலிஸாரால் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் சி.சி.ரி.வி. கமராவின் காட்சிகள் நீதிமன்றத்துக்குச் சமர்பிக்கப்பட்டன.

இதன்போது குறித்த பதிவில் சடலம் மீட்கப்பட்ட கடந்த மாதம் 17ஆம் திகதி நண்பகல் பெறப்பட்ட பதிவு



மாத்திரமே இருக்கின்றது என மரணமடைந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஸ் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதையடுத்து கடந்த மாதம் 15 மற்றும் 16ஆம் திகதிகளில் பெறப்பட்ட சி.சி.ரி.வி. கமராவின் முழுமையான பதிவுகளையும் பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிவான் பீட்டர் போல் கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நந்தாருக்கு கைதிகளை பார்க்க முடியாது சிறைச்சாலைத் திணைக்களம் அறிவிப்பு



நத்தார் பண்டிகையன்று வழமையைப் போன்று கைதிகளை பார்வையிடு வதற்கு உறவினர்களுக் கும் குடும்பத்தாருக்கும் அனுமதியளிக்கப்படமாட் டாது சிறைச்சாலைதிணைக்களத்தின் ஊடக பேச்சாளர் சந்தன ஏக்க நாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது காணப்படும் கொவிட் நிலைமையைக் கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது. போதைப் பொருள் குற் றச்சாட்டுகள் தொடர்பில் சிறையில டைக் கப்பட்டுள்ள கைதிகளை இராணுவத்தினரால் புனர் வாழ்வுக்கு உட்படுத்த தீர்மா னிக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் கூறப்பட் டுள்ளது.

# ஜெனிவாவை ஐக்கியப்பட்டு அணுக கூட்டமைப்பு உறுதி

## மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் பேசவும் முடிவு இன்றைய கொழும்புக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு,டிசெ.20

ஜெனிவாவில் வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடர் தொடர்பில் சர்வதேச சமூகத்தைத் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் சேர்ந்து ஒன்றுபட்டு கையாள முயற்சிப்பது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று தீர்மானித்தது. இதற்காக அக்கட்சிகளுடன் தொடர்ந்து பேசுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கொழும்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் செல்வம் அடைக்கலநாதன், கருணாகரம் (ஜனா), சாணக்கியன், கலையரசன், சுமந்திரன், ஸ்ரீதரன் ஆகிய எம்.பிக்களும், மாவை சேனாதிராசா, ரெலோவின் சுரேந்திரன் குருசுவாமி ஆகியோரும் பங்குபற்றினர்.

புலம் பெயர் தமிழ் அமைப்புகளினால் தயாரிக் கப்பட்ட ஒரு நகல் வடிவமே வரைவுத் திட்டமாக சுமந்திரனால், கஜேந்திரகுமார் பொன்னம்பலத் துக்கும் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது என்று கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது.

அவர்கள் அந்த நகல் வரைவை நிராகரித் துள்ள நிலையில், ஜெனிவா விவகாரத்தைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு அணுகும் வகையில் அக்கட்சிகளுடன் தொடர்ந்து பேசுவது என நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது. (உ)

# 85 ஆக நேற்று உயர்ந்தது மருதனார்மடம் கொத்தணி!

மருதனார்மடம் பொதுச் சந்தை கோரோனா வைரஸ் கொத்தணியில் மேலும் 8 பேருக்கு கோவிட் - 19 நோய்த் தொற்று உள்ளமை நேற்று சனிக்கிழமை பகல் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மரு தனார்மடம் கொத்தணி எண் ணிக்கையும் 85 ஆக உயர்வு அடைந்துள்ளதாக வடக்கு மா காண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மருதனார்மடம் பொதுச் சந்தை வியாபாரிகளுடன் நேர டித் தொடர்புடைய 8 பேருக்கே இவ்வாறு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது என்று அவர் சுட்டிக்காட்டி னார்.

இதன்மூலம் மருதனார் மடம் கொரோனா கொத்த ணியின் மூலம் பாதிக்கப்பட்ட வர்கள் எண்ணிக்கை 85ஆக அதிகரித் துள்ளது.

நேற்று அடையாளம் காணப்பட்ட வர்களில் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 5 பேர் உடு வில் சுகாதார மருத்துவ அதி காரி பிரிவைச் சேர்ந்த இரண்டு பேர் மற்றும் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீட ஆய்வுகூ டத்தில் நேற்று 110 பேரின் மாதி ரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன. அவற்றில் 6 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏனைய 104 பேருக்கு தொற்று இல்லை என்று அறிக் கை கிடைத்துள்ளது என்று வடமாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

அத்துடன் முல்லேரியா ஆய்வுகூடத்தில் சோதனைக்கு உள்படுத்திய 300 பேரில் 2 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதாக சுகாதார பணிப்பாளர் மேலும் தெரி வித்தார்




உடனடி வேலை வாய்ப்புக்கள்

கணக்காளர் / நிர்வாகி
* ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம் (அரச /அரசசார்பற்ற)
* மும்மொழித்தகைமை.
* கணனி அறிவு குறிப்பிடத்தக்கது.

சாரதி
* சாரதி அனுமதிப் பத்திரம் (B1, B)
* நம்பகத்தன்மை உடையவராக இருத்தல் வேண்டும்

அலுவலக உத்தியோகத்தர்
* O/L & A/L படித்த மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 390 8197
076 011 7004

வேலைக்கு ஆள்கள் தேவை
எஸ்.கே. கட்டட ஒப்பந்தகாரர், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

கருங்கல்லிலான விக்கிரகம் செதுக்கக் கூடிய சிற்பாச்சாரியர்கள் இருவர் வேலைக்கு தேவை.
குறிப்பு - ஆலயங்கள், மூலஸ்தானங்கள், இராஜ கோபுர நுழைவாயில், இந்தியப் பரம்பரை சிற்பாச் சாரிகளின் நிபுணத்துவ தொழில்நுட்பக் கலைஞர் கள் மூலமாக பொம்மைகள், பழமை வாய்ந்த வரலாற்று ரீதியான வடிவமைப்புக்களில் அமைத் துத் தரப்படும்.
தொடர்புகளுக்கு - 077 857 8528










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.12.2020 இல் வெளியிடப்பெற்றது.